**அல்லாஹ்வின் கட்டளை**

كُلُّ نَفْسٍ ذَآئِقَةُ الْمَوْتِ ؕ وَاِنَّمَا تُوَفَّوْنَ اُجُوْرَكُمْ يَوْمَ الْقِيٰمَةِ ؕ فَمَنْ زُحْزِحَ عَنِ النَّارِ وَاُدْخِلَ الْجَنَّةَ فَقَدْ فَازَ ؕ وَمَا الْحَيٰوةُ الدُّنْيَآ اِلَّا مَتَاعُ الْغُرُوْرِ ○

எல்லா உயிர்களும் மரணத்தைச் சுவைத்தே தீரும். உங்களுக்கு உங்க(ளின் செயல்க)ளின் முழுமையான கூலி இறுதி நாளில் (தான்) கிடைக்கும். எனவே நெருப்பிலிருந்து அகற்றப்பட்டு, சொர்க்கத்தில் நுழைக்கப்பட்டவன் வெற்றி பெற்றான். இவ்வுலக வாழ்க்கை ஏமாற்றக்கூடிய, தற்காலிகப் பொருள்கள் அல்லாமல் வேறில்லை. (5:186)

بسم الله الرحمن الرحيم　　نحمده ونصلى على رسوله الكريم　　وعلى عبده المسيح الموعود

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّاَنْتُمْ اَذِلَّةٌ

தொகுதி 5

வருடாந்திர சந்தா ரூபாய் 500/-

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly **BADAR** Qadian TAMIL

இதழ் 13

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அ.கலீல் அஹ்மது

01 ஷஃபான் 1441 ஹிஜ்ரி கமரி 26 அமான் 1399 ஹிஜ்ரி ஷம்ஸி
26 மார்ச் 2020


**அஹ்மதிய்யா செய்திகள்**

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய–தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி–யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்.

## கேட்பது மனிதனின் சிறப்பாகும். ஏற்றுக்கொள்வது அல்லாஹ்வின் (சிறப்பாகும்). எவர் புரிந்து கொள்வதில்லையோ, கேட்பதில்லையோ அவர் பொய்யராவார்

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றிலிருந்து…

### ரஹ்மானிய்யத் (அளவின்றி அருளுதல்) மற்றும் ரஹீமிய்யத் (மேன்மேலும் கருணை புரிதல்)

ஒரு குழந்தை பசியினால் நிம்மதியிழந்து பாலுக்காக எப்போது அழுது ஆர்ப்பாட்டம் செய்யுமோ அப்போது தாயின் நெஞ்சிலிருந்து பால் வேகமாக சுரக்க ஆரம்பித்து விடுகின்றது. குழந்தை துஆவின் பெயரைக்கூட கூட அறியாது. ஆனால் அதன் கூக்குரல் பாலை எவ்வாறு ஈர்த்து வரவழைக்கின்றது? இதன் அனுபவம் அனவருக்கும் இருக்கும். சில சந்தர்ப்பங்களில் பார்க்கப்பட்டுள்ளது, தாய்மார்கள் பாலை உணர்வதுகூட இல்லை. ஆனால் குழந்தையின் கூக்குரல் பாலை ஈர்த்து வந்து விடுகின்றது. அப்படியென்றால் நமது கூக்குரல் அல்லாஹ்வின் சந்நிதானத்தில் எழும்போது அது எதனையும் ஈர்த்து கொண்டுவராதா என்ன? கொண்டுவருகின்றது; அனைத்தையும் கொண்டு வருகின்றது.

ஆனால் கண்களால் குருடாகவும் அறிஞர் மற்றும் தத்துவவாதி எனும் தோரணையில் இருப்பவர்களாலும் அதனைப் பார்க்க முடியாது. குழந்தை தாயைச் சார்ந்துள்ளது. இத்தொடர்பு மற்றும் உறவை மனிதன் தனது மனதில் வைத்துக் கொண்டு துஆவின் ஞானத்தைப் பற்றி சிந்தித்துப் பார்த்தால் அவரால் மிகவும் சுலபமாகவும் எளிதாகவும் தெரிந்து கொள்ளலாம். இரண்டாம் வகையான கருணை வழங்கும் போதனை என்னவென்றால் ஒரு கருணை, கேட்ட பிறகு பிறக்கின்றது. கேட்டுக்கொண்டே செல்வீர்களாயின் கிடைத்துக்கொண்டே இருக்கும். உத்வூனி அஸ்தஜிப் லகும் (என்னை அழையுங்கள், நான் பதிலளிப்பேன் – அல் முஃமின்: 61) என்பது வெறும் வாய்வார்த்தை இல்லை. மாறாக இது மனித வாழ்வின் ஒரு முக்கிய அங்கமாகும்,,

### (துஆ)கேட்பது மனிதனின் சிறப்பாகும். ஏற்றுக் கொள்வது அல்லாஹ்வின் (சிறப்பாகும்)

கேட்பது மனிதனின் சிறப்பாகும். ஏற்றுக்கொள்வது அல்லாஹ்வின் (சிறப்பாகும்). எவர் புரிந்து கொள்வதில்லையோ, கேட்பதில்லையோ அவர் பொய்யராவார். நான் கூறிய குழந்தையின் உதாரணம் துஅவின் தத்துவத்தை ஆழமாக விளக்கிக் காட்டுகின்றது. ரஹ்மானிய்யத் மற்றும் ரஹீமிய்யத் இரண்டு கிடையாது. எனவே எவர் ஒன்றை விட்டுவிட்டு மற்றொன்றை விரும்புவாரோ அவருக்கு கிடைக்க முடியாது. ரஹ்மானிய்யத்தின் சிறப்பு என்னவென்றால் அது நம்மிடம் ரஹீமிய்யத்திடமிருந்து அருளைப் பெற்றுக்கொள்ளும் தூண்டுதலை உருவாக்குவதாகும். எவர் இவ்வாறு செய்வதில்லையோ அவர் அருளை நிராகரிப்பவராவார். இய்யாக நஃபுதுவின் பொருள் என்னவென்றால், நீ எங்களுக்கு வழங்கியுள்ள அந்த வெளிப்படையான சாதனங்கள் மற்றும் காரணிகளின் வாயிலாக நாங்கள் உன்னையே வணங்குகின்றோம் என்பதாகும். இந்த நாக்கைப் பாருங்கள், இது நரம்புகள் மற்றும் சதைகளால் படைத்துள்ளான். இவ்வாறு இல்லாதிருந்தால் நம்மால் பேச முடியாது. இதயத்தின் எண்ணங்கள்வரை வெளிப்படுத்தக்கூடிய நாவை அவன் துஆ செய்வதற்காக வழங்கியுள்ளான்.

நாம் துஆ செய்யும் வேலையை நாக்கினால் ஒருபோதும் செய்யவில்லையென்றால் இது நமது வரம்பு மீறலாகும். நிறைய நோய்கள் எப்பபடிப்பட்டதாக இருக்கின்றது என்றால் அவை நாக்கில் வந்துவிட்டால் ஒரேயடியாக நாக்கு தனது பணியை விட்டுகின்றது. எதுவரையென்றால் மனிதன் ஊமையாகி விடுகின்றான். எனவே நமக்கு நாக்கு வழங்கப்பட்டிருப்பது எப்படிப்பட்ட ரஹீமிய்யத்தாக இருக்கின்றது. இவ்வாறே காதுகளின் அமைப்பில் வித்தியாசம் வந்துவிட்டால் துளிகூட கேட்க இயலாது. இவ்வாறே இதயத்தின் நிலையும் உள்ளது. அதில் பணிவு மற்றும் உருக்கத்தின் நிலையை வைத்துள்ளான். சிந்திக்கும் மற்றும் யோசிக்கும் ஆற்றல்களை வைத்துள்ளான். நோய் வந்துவிட்டால் அவை அனைத்தும் கிடடத்தட்ட செயலற்று விடுகின்றது.

பைத்தியக்காரர்களைப் பாருங்கள், அவர்களின் ஆற்றல்கள் எவ்வாறு செயலற்று விடுகின்றது! எனவே அந்த இறைக் கொடைகளை மதிக்கவேண்டியது நம்மீது கட்டாயம் இல்லையா என்ன? அல்லாஹ் தனது அற்புதமிக்க அருளால் வழங்கியுள்ள அந்த ஆற்றல்களை பயனின்றி விட்டுவிட்டால் சந்தேகத்திற்கு இடமின்றி நாம் அருட்கொடையை நிராகரிப்பவர்களாகவே இருப்போம் எனவே நினைவில் கொள்ளுங்கள், தனது ஆற்றல்களையும் சக்திகளையும் செயல்படுத்தாமல் விட்டுவிட்டு துஆ செய்கின்றார்கள். இந்த துஆ சிறிதும் பயனை எட்டவைப்பதில்லை. ஏனென்றால் நாம் முதலில் வழங்கப்பட்டதிலிருந்து சிறிதும் வேலை வாங்காதிருக்கும்போது இரண்டாவதை எப்போது தனக்கு பயனுள்ளதாகவும் உகந்ததாகவும் ஆக்கிக்கொள்ள முடியும்?

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 110,111 – 2018 ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது)


பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**பொய் பேசுவதற்கு இஸ்லாம் ஒருபோதும் அனுமதி வழங்குவதில்லை**

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் குறிப்பான சந்தர்ப்பங்களில் பொய் சொல்வதற்கான அனுமதியை வழங்கினார்களா?**

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றுக்களின் ஒளியில் இந்த பொதுவான தவறான எண்ணம் தொடர்பாக விளக்கம்**

**மதீனாவின் அரசாங்கத்துடன் செய்யப்பட்ட உடன்படிக்கையை முறித்த பனூ நழீர், பனூ குரைலா ஆகியோருக்கு எதிராக எடுக்கப்பட்ட நடவடிக்கை தொடர்பான குறிப்பு**

**பத்ர் போரில் கலந்து கொண்ட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கலப்பற்ற மற்றும் பற்றுணர்வுமிக்க சஹாபியான ஹஸ்ரத் முஹம்மத் பின் மஸ்லமா (ரலி) அவர்களைப் பற்றிய நற்குறிப்பு**

**ஜமாஅத்தின் நீண்ட கால மார்க்கத் தொண்டரான மதிப்பிற்குரிய தாஜுத்தீன் சாஹிப் அவர்களின் வஃபாத் சந்தர்ப்பத்தின்போது ஹுஸூர் அவர்கள், அவர்களது நற்குறிப்பை எடுத்துக் கூறியவாறு ஜனாஸா காயிப் தொழுகையை தொழ வைத்தார்கள்**

செய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **லண்டனிலுள்ள பைத்துல ஃபுதூஹ் பள்ளிவாசலில் 14 பிப்ரவரி 2020** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1399 -ஆம் ஆண்டு **தப்லீக்** மாதம் **14 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ

اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ - اَلرَّحْمٰنِ الرَّحِيْمِ - مٰلِكِ يَوْمِ الدِّيْنِ - اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ -

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ - صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

கடந்த குத்பாவில் முஹம்மது பின் மஸ்லமா பற்றி கூறப்பட்டது. அதில் ஒரு பகுதி எஞ்சியுள்ளது. அது இப்போது எடுத்துக் கூறப்படும். கஅப் பின் அஷ்ரப் உடைய கொலை பற்றி முஹம்மது பின் மஸ்லமா சாக்குப்போக்குகளைக் கூறி அவரை வெளியே கூட்டி வந்து கொலை செய்தார் என்று கூறப்பட்டது. அது பொய் இல்லையா? மேலும், ஹதீஸின்படி மூன்று சந்தர்ப்பங்களில் பொய் சொல்வது அனுமதிக்கப்பட்டது என்று கூறப்பட்டது. சில ஆலிம்களின் கருத்தின்படி அவ்வாறு இருந்தது. ஆனால் உண்மையில் அது தவறான கற்பனை அல்லது ஹதீஸ் உடைய தவறான விளக்கமாகும்.

ஏனெனில் மூன்று சந்தர்ப்பங்களில் பொய் சொல்வதை அனுமதிக்கப்பட்டதாக அவர்கள் ஆக்கினர். நான் அதனை தெளிவுபடுத்தினேன். சீரத்துல் காத்தமுன் நபிய்யீனில் அது கூறப்பட்டது. ஆனால் இது பற்றி ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களும் தமது நூருல் குர்ஆனில் தெளிவாக ஒளியூட்டியுள்ளார்கள். ஒரு கிறித்தவரின் ஆட்சேபனைக்குப் பதில் அளிக்கும்போது அன்னார் கூறியுள்ளார்கள். அதன் ஒரு பகுதியை இப்போது எடுத்துரைப்பேன். அதன் மூலம் மிகவும் தெளிவாகக்கூடிய விஷயமாவது, இஸ்லாம் ஒருபோதும் பொய் சொல்ல அனுமதி தரவில்லை.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் ஒரு கிறித்தவரின் ஆட்சேபணைக்குப் பதிலளிக்கும்போது இவ்வாறு கூறுகிறார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மூன்று இடங்களில் பொய் சொல்ல அனுமதி அளித்தார்கள். தமது மார்க்கத்தை மறைத்து வைத்துக் கொள்ளவும் அனுமதி அளித்தார்கள். திருக்குர்ஆனில் தெளிவான கட்டளை உள்ளது. ஆனால் இஞ்சீலில் ஒருவர் தமது மார்க்கத்தை மறைத்து வைக்க அனுமதி தரவில்லை.

இது ஓர் ஆட்சேபனை ஆகும். இதற்குப் பதிலாக அன்னார் கூறினார்கள்: தெளிவுபடுத்தப்பட வேண்டிய விஷயம் என்னவென்றால், நன்மையை நிலைநாட்டுவதில் திருக்குர்ஆனில் எந்த அளவு கவனமூட்டப்பட்டுள்ளதோ அந்த அளவில் 10–ல் ஒன்று என்ற அளவில் கூட இஞ்சீலில் கூறப்பட்டிருப்பதாக நான் ஏற்கமாட்டேன்.

فَاجْتَنِبُوا الرِّجْسَ مِنَ الْاَوْثَانِ وَاجْتَنِبُوْا قَوْلَ الزُّوْرِ

மேலும் கூறுகிறார்கள்: திருக்குர்ஆன் பொய் சொல்வதை சிலை வணக்கத்துடன் இணைத்துக் கூறியுள்ளது. சிலை வணக்கம் மற்றும் பொய் பேசுவதிலிருந்து விலகிக் கொள்ளுங்கள் (22:31) என்று அல்லாஹ் கூறுகின்றான்.

يٰٓاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْا كُوْنُوْا قَوّٰمِيْنَ بِالْقِسْطِ شُهَدَآءَ

لِلّٰهِ وَلَوْ عَلٰٓى اَنْفُسِكُمْ اَوِ الْوَالِدَيْنِ وَالْاَقْرَبِيْنَ

பிறகு ஓரிடத்தில் கூறுகின்றான்: நம்பிக்கை கொண்டவர்களே! நீங்கள் நீதியை நிலைநாட்டுவதில் முழுமையாக நிலைத்திருங்கள். உங்கள் சாட்சியம் உங்களுக்கோ உங்கள் பெற்றோருக்கோ நெருங்கிய உறவினர்களுக்கோ எதிராக இருப்பினும், அல்லாஹ்வுக்காக சாட்சி கூறுபவர்களாயிருங்கள். (4:136)

அன்னார் கூறுகின்றார்கள்: ஆட்சேபணை செய்பவர்களை விளித்து, இறைவனை உணராதவர்களே இஞ்சீலைத் திறந்து என்னிடம் காட்டுங்கள். உண்மையைப் பேசுமாறு இஞ்சீலில் எங்கு கவனமூட்டப்பட்டுள்ளது?

பிறகு அந்த ஃபத்ஹே மஸீஹ் என்ற கிறித்தவரை விளித்துக் கூறுகிறார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மூன்று இடங்களில் பொய் சொல்ல அனுமதி வழங்கியுள்ளார்கள் என்பதில் இவர்களின் அறியாமையால் தவறு ஏற்பட்டுள்ளது. அசல் விஷயம் என்னவெனில், எந்த சஹீஹான ஹதீஸிலும் பொய் சொல்வதற்கு அனுமதி தரப்படவில்லை. மாறாக, ஹதீஸில் இந்த வார்த்தை உள்ளது, இன்குதில்த வ உரிகத் – உண்மையை விட்டு விடாதே. நீ கொல்லப்பட்டாலும் சரியே அல்லது எரிக்கப்பட்டாலும் சரியே. எந்த நிலையில் திருக்குர்ஆன் நேர்மையையும் உண்மையையும் விட்டு விடாதீர்கள் என்று கூறுகிறது. நீங்கள் எரிக்கப்பட்டாலும் கொலை செய்யப்பட்டாலும் உண்மையையே கூறுங்கள்.

பிறகு கடமை என்ற முறையில் ஒரு ஹதீஸ் நம்பத்தக்க ஹதீஸிற்கு எதிராக இருந்தால் அது ஏற்கத்தக்கதல்ல. நாம் நம்பத்தகுந்த ஹதீஸ்களையும், திருக்குர்ஆனுக்கு எதிராக இல்லாத ஹதீஸையுமே ஏற்கிறோம். ஆம்; சில ஹதீஸில் இரு பொருள் தரும் வார்த்தைகள் ஒரு காரணத்தை வைத்துப் பயன்படுத்தப்பட்டுள்ளன. அவற்றின் மீது வெறுப்பைத் தூண்டுவதற்காக 'கிதுப்' (பொய்) என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு இரு பொருள்படும் வார்த்தைகளை வெறுப்பு ஏற்படுத்துவதற்காக பொய் என்ற சொல்லில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

அவர்கள் கூறுகிறார்கள்: திருக்குர்ஆனில் கூறப்பட்டுள்ள அதுபோன்ற வார்த்தைகளைப் பார்த்து விட்டு ஓர் அறிவற்றவர், ஒரு விஷயத்தைப் புரிய வைக்க ஒரு சொல்லைப் பயன்படுத்தும்போது அதனை உண்மையாகக் கருதி விடுகிறார். அவர் திட்டமான தீர்ப்பை அறியாதவர் ஆவார். உண்மையான பொய் தீயது. பொதுவான இணை வைப்புக்கும் சமமானதாகும். 'தொரியா' (வேறு பொருள்படும் வார்த்தை) –ஐக் கூறுவது பொய்யல்ல. அதனை பொதுமக்களுக்காக கட்டாயச் சூழலில் பொய்யின் சாயலில் கூறுவதற்கு ஹதீஸில் அனுமதி தரப்பட்டுள்ளது. பிறகும் உண்மையை மாற்றிச் சொல்வதாகிய 'தொரியா' –விலிருந்தும் விலகிக் கொள்ளுங்கள் என்றே கூறப்பட்டுள்ளது.

'தொரியா' இஸ்லாமிய சொல் வழக்கில், குழப்பம் ஏற்படும் என்ற பயத்தில் சிலவற்றை மறைப்பதற்காக வேறு ஒரு வார்த்தையை காரணத்தை மறைத்து வைப்பதற்காக ஏதாவது உதாரணம் அல்லது உவமையாகக் கூறப்பட்டால் அறிவுள்ளவர் புரிந்து கொள்வார். அறிவற்றவருக்குப் புரியாது. அவரது எண்ணம் கூறுபவரின் நோக்கத்தில் இல்லாத வேறு பக்கம் சென்று விடும். கூறியவர், கூறிய விஷயம் பொய்யல்ல. முற்றிலும் உண்மையாகும் என்று சிந்தித்துப் பார்த்த பிறகு தெரிய வரும். அதில் பொய்யின் எந்தப் பகுதியும் இருக்காது. உள்ளம் பொய்யின் பக்கம் சிறிது சாய்ந்தது.

சில ஹதீஸ்களில் இரு முஸ்லிம்களுக்கிடையில் சமாதானம் ஏற்படுத்தவும் அல்லது மனைவியிடம் குழப்பம் ஏற்பட்டு சண்டை வருவதிலிருந்து தப்பிக்கவும் அல்லது போரில் ஒரு காரணத்தை வைத்து எதிரிகளிடமிருந்து மறைத்து வைக்கும் நோக்கத்திலும் எதிரியை வேறு பக்கம் குனிய வைக்கும் நோக்கத்திலும் இவ்வாறு செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனினும் நிறைய ஹதீஸ்கள் வேறு கருத்திலும் உள்ளன. எனவே அதிலிருந்து தெரிய வருவதாவது, 'தொரியா' (உண்மையை மாற்றிப் பேசுதல்) மேல் நிலையிலுள்ள இறையச்சத்திற்கு மாற்றமானதாகும். எல்லா நிலையிலும் வெளிப்படையான உண்மையே சிறந்தது. அதனால் கொலை செய்யப்பட்டாலும் சரியே. எரிக்கப்பட்டாலும் சரியே.

பிறகு அன்னார் கூறுகிறார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முற்றிலும் அதிலிருந்து விலகி இருக்குமாறு கட்டளையிட்டுள்ளார்கள். கூறுவதன் பொருள் பொய்யைப் போன்றதாகக் கூட இருக்கக் கூடாது.

பிறகு கூறுகின்றார்கள்: நான் பார்க்கிறேன். ஜனாப் ஸய்யிதில் முர்ஸலீன் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உஹதில் தனியாக இருந்தபோதிலும் நீட்டப்பட்ட வாள்களுக்கு மத்தியில், நான் முஹம்மது. நான் நபியுல்லாஹ். நான் அப்துல் முத்தலிபின் மகன் ஆவேன் என்று கூறினார்கள்.

இங்கு ஒன்று தெளிவுபடுத்த வேண்டியது உள்ளது. இதன் அடிக்குறிப்பில் எழுதப்பட்டுள்ளது. இந்த நூல் அச்சடித்து வெளிவரும்போது மறதியாக உஹது என்று எழுதப்பட்டு விட்டது. இந்த சம்பவம் ஹுனைன் போரில் நடந்ததாகும் என்று எழுதப்பட்டு விட்டது. உஹது போரில் நடந்ததல்ல. ஆனால் நமது Research Cell சீரத்துல் ஹல்பிய்யாவில் எழுதப்பட்டுள்ளது என்று ஆதாரம் எடுத்து அனுப்பியுள்ளது. இந்த வார்த்தைகளை அன்னார் ஹுனைன் போரிலும் உஹது போரிலும் கூறினார்கள் என்று வருகிறது. இஷாஅத் துறை – நஸாரத் இஷாஅத் வருங்காலத்தில் இந்த அடிக்குறிப்பை அகற்ற வேண்டும். நான் பெரும்பாலும் பார்க்கிறேன். அவசரப்பட்டு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய வார்த்தைகளுக்குப் பொருள் தரும்போது அல்லது எளிதை ஏற்படுத்த அடிக்குறிப்பில் தவறு என்று எழுதப்படுகிறது. அல்லது மறதி என்று எழுதப்படுகிறது. நிறைய ஆராய்ச்சி செய்ய வேண்டும். கவனம் செலுத்த வேண்டிய தேவையும் உள்ளது. எனவே எனக்கு ஆதாரம் கிடைத்தது. மிகவும் தெளிவாக கூறப்பட்டுள்ளது. ஹுனைன், உஹது இரு சந்தர்ப்பங்களிலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இந்த வார்த்தைகளைக் கூறினார்கள். எனவே இந்தத் தெளிவும் இதில் கிடைத்து விட்டது.

தொடர்ந்து அன்னார் கூறுகின்றார்கள்: ஒரு ஹதீஸில் 'தொரியா' (உண்மையை மாற்றிச் சொல்வது) –வை பொய் என்று உதாரணமாக கூறப்பட்டால் அதனை அவ்வாறு ஏற்பது கடும் அறியாமையாகும். ஒரு விஷயத்தை எளிதாகப் புரிய வைப்பதற்காக ஒரு வார்த்தை எழுதப்படுகிறது எனில் ஒருவர் அதனை உண்மையில் பொய் பற்றி கூறுவதாகக் கருதினால் அது முற்றிலும் அறியாமையாகும். திருக்குர்ஆன் மற்றும் நம்பத்தக்க ஹதீஸ்கள் யதார்த்தமாகப் பொய்யை ஹராமானது என்றும் அசுத்தமானது என்றும் கூறிகின்றன. உயர் தரமான ஹதீஸ்களில் 'தொரியா' என்பது ஒரு விஷயத்தைத் தெளிவாக விளக்குவதற்காகக் கூறப்படுகிறது. எனவே ஒரு ஹதீஸில் 'தொரியா' –வை 'கிஸ்ப்' பொய் என்ற சொல்லில் கூறினால் நவூதுபில்லாஹ் அதனை உண்மையான பொய் என்று பொருள் கொள்ளக் கூடாது. மாறாக, நுட்பமான தக்வாவின் அடையாளமாவது 'தொரியா' –வைக் கூட பொய்யாகக் கருதி விலகி விடுவதாகும். 'தொரியா' –வை உவமை வடிவில் பொய் என்று கூறினால் குர்ஆன் மற்றும் நம்பத்தகுந்த ஹதீஸ்களையே பின்பற்ற வேண்டும். ஒரு விஷயம் இதற்கு எதிராக இருந்தால் நாம் அந்தப் பொருளை ஒருபோதும் ஏற்கமாட்டோம்.

பிறகு அன்னார் கூறுகின்றார்கள்: திருக்குர்ஆன் பொய்யர்களின் மீது சாபம் இடுகிறது. மேலும் பொய்யர்கள் ஷய்த்தானின் நண்பர்கள் ஆவர். பொய் ஈமான் அற்ற நிலையாகும். பொய்யர்கள் மீது ஷய்த்தான்கள் இறங்குகின்றனர். பொய் சொல்லாதீர்கள் என்று மட்டும் கூறவில்லை. மாறாக, பொய்யர்களின் நட்பையும் விட்டு விடுங்கள் என்று கூறுகிறது. அவர்களை உங்கள் நண்பர்களாக ஆக்கிக் கொள்ளாதீர்கள். இறைவனுக்கு அஞ்சுங்கள். உண்மையாளர்களுடன் இருங்கள் என்று கூறுகிறது.

ஓரிடத்தில் கூறுகின்றார்கள்: ஒரு விஷயத்தைப் பேசினால் பேசுவது உண்மையானதாக இருக்க வேண்டும். எந்த அடிப்படையிலும் பொய் கூறாதீர்கள்.

(நூருல் குர்ஆன் எண் 2, ரூஹானி கஸாயின் தொகுதி 9 பக்கம் 402–408 & சீரத்துல் ஹல்பிய்யா தொகுதி 2 பக்கம் 310 –

## திருக்குர்ஆனிலிருந்து…

நீங்கள் அல்லாஹ்வுக்கு கட்டுப்பட்டு நடங்கள். இந்தத் தூதருக்கும் கட்டுப்பட்டு நடங்கள். விழிப்பாக இருங்கள். நீங்கள் புறக்கணித்து விட்டால் தூதைத் தெளிவாக எடுத்துரைப்பதே நம் தூதரின் கடமை என்பதனைத் தெரிந்து கொள்ளுங்கள். (5:93)

Faizal Hameed Ilahi, Tittacherry

2002 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது

பொய் சம்பந்தமாக இந்த ஆதாரம் வைக்கப்பட்டது. அதில் விளக்கம் வந்து விட்டது.

இப்போது முஹம்மது பின் மஸ்லமா பற்றி அவரது வாழ்க்கையின் மேலும் சில குறிப்புகளைக் கூறுகிறேன். பனூ நழீர் ஏமாற்றும் விதத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது ஆட்டுக்கல்லை விழச் செய்து கொலை செய்யச் சதித்திட்டம் தீட்டினார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு வஹீ மூலமாக அது தெரிவிக்கப்பட்டது. உடனே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வேகமாக எழுந்தார்கள். அல்லது ஏதோ ஒரு தேவைக்காக எழுந்தார்கள். மதீனா நோக்கிச் சென்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சென்ற பிறகு அன்னாரின் கண்ணியத்திற்குரிய சஹாபாக்களும் அன்னாரைப் பின்தொடர்ந்து மதீனா வந்தார்கள். கண்ணியத்திற்குரிய சஹாபாக்கள் மதீனா அடைந்ததும் தெரிய வந்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முஹம்மது பின் மஸ்லமாவைக் கூப்பிட்டிருந்தார்கள். அப்போது அபூபக்கர், அல்லாஹ்வின் தூதரே! ஏன் எழுந்து வந்து விட்டீர்கள். எங்களுக்குக் கூட தெரியாதே? என்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், யூதர்கள் என்னை ஏமாற்ற நினைத்தார்கள். அல்லாஹ் எனக்கு தெரியப்படுத்தி விட்டான். அல்லாஹ் எனக்கு அது குறித்து வசனத்தை இறக்கினான்.

நம்பிக்கை கொண்டவர்களே! அல்லாஹ்வின் அருள்களை நினைவு கூருங்கள். ஒரு சமுதாயம் உங்கள் மீது சதி செய்ய விரும்பியபோது அவன் செய்த அருள்களை நினைவு கூருங்கள். அவன் அவர்களின் கைகளைத் தடுத்து விட்டான். நீங்கள் இறையச்சத்தை மேற்கொள்ளுங்கள். நம்பிக்கை கொண்டவர்களே! அல்லாஹ்வின் மீதே பொறுப்பு சுமத்த வேண்டும். (5:12)

எவ்வாறிருப்பினும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முஹம்மது பின் மஸ்லமாவை அழைத்துக் கூறினார்கள். சம்பவம் இவ்வாறு வருகிறது. முஹம்மது பின் மஸ்லமா ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சமூகத்திற்கு வந்தார்கள். அன்னார் கூறினார்கள்: நீர் பனூ நழீரின் யூதர்களிடம் சென்று அல்லாஹ்வின் தூதர் உங்களிடம் என்னை அனுப்பினார். நீங்கள் இந்த ஊரை விட்டு வெளியேற வேண்டுமாம் என்று கூறுங்கள். அவர்கள் உடன்படிக்கையைப் பேணவில்லை. அதனை முறித்து விட்டனர். அதற்கான தண்டனை ஊரை விட்டு வெளியேற வேண்டும் என்பதாகும். அவர் யூதர்களிடம் சென்று, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் உங்களிடம் ஒரு தூதுச் செய்தியைக் கூறி அனுப்பினார்கள். ஆனால் நான் அதனை உங்களிடம் கூறமாட்டேன். அதற்கு முன் ஒரு விஷயத்தை உங்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன். அதனை நீங்கள் உங்கள் சபைகளில் நினைவுபடுத்த வேண்டும் என்று கூறி பழைய விவகாரங்களைக் கூறினார்.

பிறகு யூதர்கள், என்ன விஷயம்? என்றார்கள். முஹம்மது பின் மஸ்லமா கூறினார். நான் தவ்ராத்தின் மீது ஆணையிட்டுக் கூறுகிறேன். அதனை அல்லாஹ் மூஸாவின் மீது இறக்கினான். நீங்கள் அறிவீர்களா? ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்கள் தோன்றுவதற்கு முன் நான் உங்களிடம் வந்தேன். நீங்கள் உங்கள் முன் தவ்ராத்தை விரித்து வைத்திருந்தீர்கள். நீங்கள் அந்த சபையில் கூறினீர்கள். இப்னு மஸ்லமாவே! நாங்கள் உமக்கு உணவளிப்பதை விரும்புகிறீர்களா? விரும்பினால் உணவு தருகிறோம் என்று கூறினீர்கள். உன்னை யூதனாக ஆக்க விரும்பினால் நாங்கள் உம்மை யூதனாக ஆக்குகிறோம் என்றீர்கள். அப்போது நான் அவர்களிடம் கூறினேன். எனக்கு உணவளியுங்கள். என்னை யூதனாக்க வேண்டாம். இறைவன் மீது ஆணையாக! நான் எப்போதும் யூதனாக மாட்டேன் என்றேன். நீங்கள் ஒரு தட்டில் எனக்கு உணவு தந்தீர்கள். நீங்கள் என்னிடம் கூறினீர்கள். நீங்கள் இது யூதர்களின் மதம் என்று நினைத்து ஏற்க மறுக்கிறீர். அதாவது யூதர்கள் முஹம்மது பின் மஸ்லமாவிடம் கூறினார்கள். இது யூத மதம் என்று நினைத்து நீர் ஏற்க மறுக்கிறீர். நீங்கள் கேட்டதற்கிணங்க ஒரு ஒருமையை விரும்புகிறீர்கள் எனில் அபூ அம்ர் ராஹிப் அது உண்மையானது இல்லை. அதாவது ஒரு நபி வருவது பற்றி கேள்விப்பட்டுள்ளீர்கள். அபூ அம்ர் ராஹிப் அதனை உண்மைப்படுத்துபவராக ஆக முடியாது.

மேலும் கூறினார்: உங்களிடம் வரும் அந்த இருப்பு புன்முறுவலுடன் இருக்கும். அது யுத்தம் செய்யக் கூடியது. அதன் கண்களில் சிவப்பு இருக்கும். அது யமனிலிருந்து வரும் வாகனத்தில் செல்லும். ஒட்டகத்தில் சவாரி செய்யும். போர்வை போர்த்தி இருக்கும். சிறிய அளவு உணவில் தன்னிறைவு பெறும். வாள் அதன் தோள் மீது இருக்கும். அது ஞானத்துடன் பேசும். உமது நெருங்கிய உறவினர் ஆவார். அல்லாஹ்வின் மீது ஆணையாக! இந்த நகரில் இப்போது உங்கள் நெஞ்சில் அடி கிடைக்கும். கொலை செய்யப்படுவீர்கள். காது மூக்கு வெட்டப்படும் என்று கூறினீர்கள். உடனே யூதர்கள் ஆம்; நாங்கள் அவ்வாறு கூறினோம். ஆனால் நாங்கள் கூறிய அந்த நபி இவரல்ல. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அந்த நபியல்ல என்றார்கள்.

முஹம்மது பின் மஸ்லமா கூறினார்கள்: நான் எனது தூதுச் செய்தியைக் கூறி முடித்து விட்டேன். நான் கூறிய விஷயத்தையே உங்களிடம் நினைவூட்ட விரும்புகிறேன் என்று கூறியவாறு அவர் அடுத்த விஷயத்திற்கு வந்து விட்டார். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் உங்களிடம் அனுப்பினார்கள். நீங்கள் உங்கள் உடன்படிக்கையை முறித்து விட்டீர்கள். உங்களுக்காக போடப்பட்ட உடன்படிக்கையாக இருந்தது. நீங்கள் அவரை ஏமாற்ற முயற்சி செய்தீர்கள். முஹம்மது பின் மஸ்லமா அந்த யூதர்களிடம் அவர்களின் விருப்பத்தை எடுத்துக் கூறினார்கள். நீங்கள் இவ்வாறு செய்ய விரும்பினீர்கள்.

ஹஸ்ரத் அம்ர் பின் ஜஹாஸ் ஒரு முகட்டில் ஏறி ஒரு பாறையைக் கீழே தள்ள முயற்சி செய்தார்கள் என்றதும் அவர்கள் மவுனமாகி விட்டனர். எதுவும் கூற முடியவில்லை. முஹம்மது பின் மஸ்லமா கூறினார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், நீங்கள் எனது நகரை விட்டு வெளியேறி விடுங்கள். நான் உங்களுக்கு பத்து நாள்கள் அவகாசம் தருகிறேன். பிறகு எவராவது இங்கு தென்பட்டால் அவர்களின் கழுத்தை வெட்டி விடுவேன் என்று கூறினார்கள். இப்னு மஸ்லமா இதுபோன்ற ஒரு தூதுச் செய்தியை அவுஸ் கோத்திரத்தைச் சார்ந்த ஒருவர் கொண்டு வந்ததை எங்களால் யோசிக்கவும் முடிந்ததில்லை என்று யூதர்கள் கூறினர்.

ஹஸ்ரத் முஹம்மது பின் மஸ்லமா கூறினார்: இப்போது உள்ளம் மாறி விட்டது. சில நாள்கள் யூதர்கள் ஆயத்தம் செய்து கொண்டனர்.

## திருக்குர்ஆனிலிருந்து...

நிச்சயமாக அல்லாஹ் தண்டனையைக் கொடுப்பத்தில் கடினமானவன் என்பதையும், மேலும் நிச்சயமாக அல்லாஹ் மிக்க மன்னிப்பவனும் மேன்மேலும் கருணை காட்டுபவனுமாவான் என்பதையும் அறிந்து கொள்ளுங்கள். (5:99)

S.S.H.Muhammed Lebbai, Melapalayam

அவர்களின் சவாரிகள் ஸுஜதர் என்ற இடத்தில் இருந்தது. அது மதீனாவிலிருந்து குபா செல்லும் வழியில் ஆறு மைல் தூரத்தில் இருந்த மேய்ப்பு நிலமாகும். அங்கு கால்நடைகளை மேய்த்து வந்தனர். அங்கிருந்து அவர்களின் சவாரிகள் கொண்டு வரப்பட்டன. மேலும் பனூ அஷியா கோத்திரத்திடமிருந்து வாடகைக்கு ஒட்டகங்கள் வாங்கப்பட்டன. இவ்வாறு புறப்படத் தயாராயினர். இது வரலாற்று நூலிலுள்ள ஆதாரமாகும்.

(சபலுல் ஹுதா வர்ரிஷாத் தொகுதி 4 பக்கம் 317–320 கஸ்வா பனூ நஸீர் – 1993 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & மஜ்மவுல் பல்தான் தொகுதி 2 பக்கம் 132)

யூதர்களின் வழக்கம் என்னனவெனில், அதனை விளக்கியவாறு ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் எழுதுகிறார்கள்: பனூ குரைழாவின் நம்பிக்கை முறிவு சம்பவம் ஆகும். இதனை பனூ அம்மார் யாசர் சம்பவங்களைக் கூறியுள்ளேன். வரலாற்றின் அடிப்படையில் இப்போது கூறுவது அவசியமாகும்.

அவர்கள் எழுதுகிறார்கள்: பனூ குரைழாவின் விவகாரம் முடிவடைய இருந்தது. அவர்களின் தவறு அலட்சியப்படுத்தப்பட்டதல்ல. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அகழ் போரிலிருந்து திரும்பியதும் அறிவித்தார்கள். நீங்கள் வீட்டில் சென்று ஓய்வெடுக்காதீர்கள். மாறாக, மாலைக்குள் பனூ குரைழாவின் கோட்டைக்குச் செல்லுங்கள் என்றார்கள். ஹஸ்ரத் அலியை பனூ குரைழாவிடம் அனுப்பினார்கள். நீங்கள் ஏன் உடன்படிக்கையை மீறினீர்கள்? என்று கேட்பதற்காக அனுப்பினார்கள். பனூ குரைழா வெட்கப்பட்டு, மன்னிப்புக் கேட்டு பிழைபொறுக்குமாறு வேண்டுவதற்குப் பதில் ஹஸ்ரத் அலியையும் உடன் சென்றவரையும் ஏசத் தொடங்கினர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தாரின் பெண்களை ஏசினர். முஹம்மது (ஸல்) யார் என்று எங்களுக்குத் தெரியாது. அவருடன் எங்களுக்கு எந்த உடன்படிக்கையும் கிடையாது என்றனர்.

ஹஸ்ரத் அலி அவர்களின் பதிலைக் கேட்டு திரும்பி வந்தார்கள். அப்போது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் சஹாபாக்களுடன் அந்த யூதர்களின் கோட்டையை நோக்கி வந்து கொண்டிருந்தார்கள். யூதர்கள் மோசமாக ஏசிப் பேசுகிறார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடைய மனைவிகள் மற்றும் மகள்களைக் குறித்தும் தூய்மையற்ற வார்த்தைகளைக் கூறுகின்றனர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவர்களுக்கு அந்த வார்த்தைகளைக் கேட்டு கஷ்டம் ஏற்படும் என்ற எண்ணத்தில் அல்லாஹ்வின் தூதரே! ஏன் நீங்கள் சிரமப்படுகிறீர்கள்? நாங்கள் போதுமே? நீங்கள் திரும்பிச் செல்லுங்கள் என்று அலி கூறினார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அவர்கள் ஏசிப் பேசுகிறார்கள் என்பதை நான் புரிகிறேன். அந்த ஏச்சுக்கள் என் காதில் பட வேண்டாம் என்று நினைக்கிறீர் என்றார்கள். ஹஸ்ரத் அலி அவர்கள், ஆம் யாரஸூலல்லாஹ்! விஷயம் அதுதான் என்று கூறினார்கள். உடனே ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் பிறகு என்ன நடந்தது? ஏசிப் பேசுகிறார்கள். மூஸா நபி (அலை) அவர்களைச் சார்ந்தவர் இதனை விட அதிகமாக அவருக்கு கஷ்டம் தந்தனர் என்றவாறு அன்னார் யூதர்களின் கோட்டையின் பக்கம் சென்றார்கள். யூதர்கள் கோட்டைக் கதவைச் சாத்திக் கொண்டனர். முஸ்லிம்களுடன் சண்டையைத் தொடங்கினர். அவர்களின் பெண்களும் சண்டையில் பங்கெடுத்தனர். கோட்டைச் சுவருக்குக் கீழே சில முஸ்லிம்கள் அமர்ந்திருந்தார்கள். ஒரு யூதப் பெண் கல்லை வீசி ஒரு முஸ்லிமைக் கொன்று விட்டாள். சில கால அவகாசத்திற்குப் பிறகு யூதர்கள் நீண்ட காலம் எதிர்கொள்ள முடியாது என்பதை உணர்ந்து கொண்டார்கள். உடனே அவர்களின் தலைவர்கள், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் தமது விருப்பத்தைத் தெரிவித்தனர். அபூ லுபாமா அன்ஸாரியான அவர்களின் நண்பரும் அவ்ஸ் கோத்திரத்தின் தலைவருமான ஒருவரை எங்களிடம் அனுப்புங்கள். அவருடன் நாங்கள் ஆலோசனை செய்கிறோம் என்றனர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அபூ லுபாமாவை அனுப்பினார்கள். அவரிடம் எதிரிகள் ஆலோசனை கேட்டனர்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கேட்டபடி நாங்கள் எங்களது ஆயுதங்களை கீழே போட்டு விடச் சொன்னால் நாங்கள் அதனை ஏற்றுக் கொள்ளலாமா? ஹஸ்ரத் அபூ லுபாமா வாயினால் ஆம்; என்றார். அவர் கழுத்தில் கையை வைத்துக் கொலை என்பது போன்று அடையாளம் செய்தார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அதுவரை எந்த முடிவையும் அறிவிக்கவில்லை. ஆனால் அபூ லுபாமா இவர்களின் குற்றத்திற்குத் தண்டனையாக இந்த எதிரிகளும், உடன்படிக்கையை முறித்தவர்களும் ஆகிய யூதர்களுக்கு தண்டனை, கொலையைத் தவிர வேறு என்ன இருக்க முடியும்? எந்த யோசனையும் இன்றி சைக்கினையாக அவர்களுக்கு அழிவு ஏற்படும் என்று அவ்விஷயத்தை தெரிவித்து விட்டார்.

யூதர்கள், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய முடிவை ஏற்றுக் கொண்டால் மற்ற யூதக் கோத்திரங்களைப் போன்று மதீனாவை விட்டு நாடு கடத்தப்படலாம். ஆனால் துரதிஷ்டவசமாக அவர்கள் ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களுடைய தீர்ப்பை ஏற்க மாட்டோம் என்று கூறி விட்டனர். நாங்கள் எங்களுடன் நட்புக் கோத்திரமான அவ்ஸ் கோத்திரத்தின் தலைவர் ஸஅத் பின் மஆஸ் உடைய தீர்ப்பை மட்டுமே ஏற்போம் என்று கூறினர். அவர் என்ன தீர்ப்பு அளித்தாலும் அதனை ஏற்போம் என்று கூறினர். ஆனால் அப்போது யூதர்களிடம் கருத்து வேறுபாடு ஏற்பட்டது. சிலர் கூறினர். நமது சமூகம் உடன்படிக்கையை மீறி விட்டது. முஸ்லிம்களின் நடவடிக்கையிலிருந்து அவர்களின் மார்க்கம் உண்மை என்பது தெரிகிறது என்றனர். ஆம்; மக்கள் தமது மதத்தை விட்டு விட்டு இஸ்லாத்தில் நுழைந்து விட்டனர். யூதர்களின் தலைவர்களுள் ஒருவரான அம்ர் பின் ஸஅதி தமது சமுதாயத்தைக் கடிந்து கொண்டார். நீங்கள் உடன்படிக்கையை மீறி விட்டீர்கள். நீங்கள் இனி முஸ்லிம் ஆகிவிடுங்கள் அல்லது ஜிஸ்யா தர சம்மதியுங்கள் என்றார். யூதர்களோ, நாங்கள் முஸ்லிமாகவும் மாட்டோம். அதனை விட கொலை செய்யப்படுவது நல்லது என்று கூறினர்.

பிறகு அவர் கூறினார்: நான் உங்களை விட்டு விலகிக் கொள்கிறேன் என்று கூறியவாறு கோட்டையை விட்டு வெளியேறி வந்து விட்டார். அவர் கோட்டையை விட்டு வெளியே வரும்போது முஸ்லிம்களின் ஒரு கூட்டத்திலிருந்த முஹம்மது பின் மஸ்லமா அவரைப் பார்த்து, இவர் யார்? என்று கேட்டார். அவர் நான் இன்ன ஆள் என்று கூறினார். முஹம்மது பின் மஸ்லமா கூறினார்.

## திருக்குர்ஆனிலிருந்து...

வானங்கள், பூமி மற்றும் இவற்றிற்கிடையிலுள்ளவை ஆகியவற்றின் ஆட்சி அல்லாஹ்வுக்கே உரியது. அவன் எல்லாவற்றிற்கும் முழு ஆற்றல் பெற்றவனாவான். (5:121)

A.Basheer Ahmad, Melapalayam

அல்லாஹும்ம லா தஹ்ரிம்னா இகாலத்த அஸாரத்தில் கிராம். நீர் அமைதியாக செல்லும் என்று கூறிவிட்டு அல்லாஹ்விடம் துஆவும் செய்தார். அல்லாஹ்வே! கண்ணியத்திற்குரியவர்களின் தவறுகளின் மீது திரையிடுவதிலிருந்து என்னை ஒருபோதும் விலக்கி விட வேண்டாம். ஏனெனில், அம்மனிதர் தமது சமுதாயத்தின் செயல்களைக் குறித்து வெட்கப்படுகிறார் எனில் எங்களுக்கும் கூட நல்லொழுக்கக் கடமை உள்ளது. அவர்களை மன்னிக்க வேண்டும். எனவே நான் அவரை கைது செய்யவில்லை. அல்லாஹ் எப்போதும் என்னை நல்ல செயல்களைச் செய்பவனாக ஆக்கி அருள்வானாக என்றார்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு இது தெரிய வந்தபோது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முஹம்மது பின் மஸ்லமாவை ஏன் யூதரை விட்டு விட்டீர்கள் என்று கண்டிக்கவில்லை. மாறாக, அவரது செயலைப் பாராட்டினார்கள்; புகழ்ந்தார்கள். முஸ்லிம்கள், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய போதனைகளுக்கேற்ப எப்போதும் நேர்மையைக் கடைபிடித்தனர். கைபர்வாசிகள் விஷமம் செய்தனர். ஆனால் அபூ ராஃபி என்ற யூதரின் கொலை நடந்தது. அந்த சம்பவம் இவ்வாறாகும். அவரைக் கொல்வதற்கு சஹாபாக்களின் ஒரு குழு அனுப்பப்பட்டது. அதிலும் முஹம்மது பின் மஸ்லமா இருந்தார். அவர்தான் அபூ ராஃபியைக் கொலை செய்தார்கள். கொன்றது ஒருவர்தான். அதற்காக ஒரு குழு அங்கே சென்றது.

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் அந்த சம்பவத்தை ஹதீஸ்களிலிருந்து இவ்வாறு விளக்கியுள்ளார்கள்: யூதர்களின் தீய செயல்களினால் முஸ்லிம்களுக்கு எதிரில் அஹ்ஸாப் போர் ஹிஜ்ரி 5 ஆம் ஆண்டு நடந்தது. அப்போது ஹுயி பின் அக்தப் என்ற பனூ குரைழாவின் விஷமம் எல்லையைத் தொட்டது. சலாம் பின் அபி ஹுகைக் என்ற மனிதனின் சுட்டுப்பெயர் அபூ ராஃபி என்பதாகும். அவர் கைபர் பகுதியில் சுதந்திரமாக தமது குழப்பமூட்டும் செயல்களில் மூழ்கி இருந்தார். அஹ்ஸாப் போரின் தோல்வி மற்றும் செயலிழப்பு, பனூ குரைழாவின் தீய முடிவு ஆகியவை அவரது கோபத்தை இன்னும் அதிகமாக்கியது. அத்ஃபான் உடைய கோத்திரத்தின் குடியிருப்புகள் கைபருக்கு அருகில் இருந்தன. கைபரின் யூதர்கள் நஜ்தின் கோத்திரத்தாரின் அக்கம்பக்கத்தவர் ஆவர்.

அபூ ராஃபி என்பவர் பெரும் வணிகராகவும் பெரிய மனிதராகவும் இருந்தார். நஜ்தின் குரைஷி மற்றும் போரில் தோற்ற சமுதாயத்தை முஸ்லிம்களுக்கு எதிராக தூண்டி விட்டுக் கொண்டே இருந்தார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அவர்களை எதிர்ப்பதில் கஅப் பின் அஷ்ரபுக்கு முற்றிலும் ஒத்தவராக இருந்தார். அந்த வகையில் நாம் குறிப்பிடும் அந்தக் காலத்தில் அவர்கள் அத்பான்களை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை எதிர்த்து நிற்க பெரும் பொருள் உதவி செய்தார். வரலாற்றிலிருந்து தெரிய வருவதாவது, ஷஅபான் மாதம் பனூ சஅத் தரப்பிலிருந்து ஒரு ஆபத்து முஸ்லிம்களுக்கு உருவானது. அதனை தடுப்பதற்காக ஹஸ்ரத் அலி தலைமையில் ஒரு படை மதீனாவிலிருந்து அனுப்பப்பட்டது. அவர்களைத் தூண்டியதிலும் கைபர் யூதர்களின் கரம் இருந்தது. அபூ ராஃபியின் தலைமையில் அவர்கள் இதனை செய்து வந்தார்கள். அபூ ராஃபி அத்துடன் நிற்கவில்லை. அவரது பகைமை முஸ்லிம்களின் இரத்த தாகம் கொண்டதாக இருந்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய இருப்பு அவரது கண்களைப் பெரிதும் உறுத்திக் கொண்டிருந்தது. இறுதியில் அவர் ஒரு சதித்திட்டம் தீட்டியவாறு அஹ்ஸாப் போர் போன்றே நஜ்தின் கோத்திரத்தையும் அத்பான் மற்றும் பிற கோத்திரத்தை சென்று சந்தித்தார். முஸ்லிம்களை ஒன்றுசேர்ந்து தாக்குவதற்காக பெருமளவில் திரட்டத் தொடங்கினார். எந்த அளவுக்கு செய்து விட்டார் எனில் முஸ்லிம்களின் கண்களுக்கு முன் அஹ்ஸாப் உடைய தோற்றம் தென்படத் தொடங்கியது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய சமூகத்தில் கஸ்ரஜ் உடைய சில அன்ஸாரி வந்து, இந்தக் குழப்பத்திற்கு முடிவுகட்ட இந்தக் குழப்பத்தின் செயலராக விளங்குகின்ற அபூ ராஃபியை அழிப்பதே சரியான முடிவாகும் என்று கூறினர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இதனை யோசித்தவாறு, நாட்டில் இரத்தத்தை ஓட்டுவதற்குப் பதில் ஒரு குழப்பமூட்டும் ஒரு மனிதனைக் கொல்வது சிறந்தது என்று முடிவெடுத்தார்கள். இதனால் அதற்கு அனுமதி வழங்கினார்கள்.

அப்துல்லாஹ் பின் அதிக் அன்ஸாரியின் தலைமையில் நான்கு கஸ்ரஜ் சஹாபிகளை அபூ ராஃபியிடம் அனுப்பினார்கள். செல்லும்போது, பாருங்கள்! எந்தப் பெண்ணையோ குழந்தையையோ கொல்லக் கூடாது என்று கவனமூட்டினார்கள். இந்த வகையில் ஹிஜ்ரி 6 ஆம் ஆண்டு ரமலான் மாதம் அந்தக் குழு புறப்பட்டது. மிகவும் எச்சரிக்கையுடன் தமது பணியை முடித்துத் திரும்பி வந்தது. இந்த துன்ப மேகம் மதீனாவை விட்டு விலகியது. இந்தச் சம்பவத்தின் விபரம் புகாரியில் இவ்வாறு வருகிறது.

பரா பின் ஆஸிம் அறிவிக்கிறார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சஹாபாக்களின் ஒரு குழுவை அபூ ராஃபியிடம் அனுப்பினார். அக்குழுவுக்கு அப்துல்லாஹ் பின் அதிக் தலைவராக நியமிக்கப்பட்டார். அபூ ராஃபி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு மிகவும் தொல்லை கொடுத்து வந்தான். அன்னாருக்கு எதிராக மக்களைத் தூண்டினான். உதவி செய்தான். அப்துல்லாஹ் பின் அதிக் மற்றும் அவருடன் இருந்தவர்கள் அபூ ராஃபி உடைய கோட்டைக்கு அருகில் வந்ததும் சூரியன் மறைந்து விட்டது. அப்துல்லாஹ் பின் அதிக் உடன் இருந்தவர்களைப் பின்னால் போகச் சொல்லி விட்டு கோட்டையின் வாசலுக்கு அருகில் சென்றார். போர்வையால் மூடிக் கொண்டு தனது தேவையை நிறைவேற்ற அமர்வது போன்று அமர்ந்து கொண்டார். கோட்டைக் கதவை மூடக்கூடியவர் வாசலுக்கு வரும்போது அப்துல்லாஹ்வைப் பார்த்து, மனிதரே! கோட்டைக் கதவை மூடப்போகிறேன். உள்ளே வருவதாயின் உடனே வா என்றார். அப்துல்லாஹ் போர்வையால் மூடிக் கொண்டே உள்ளே சென்று ஓரிடத்தில் மறைந்து கொண்டார். கதவை மூடுபவர் கதவை மூடி விட்டுச் சென்று விட்டார்.

பிறகு அப்துல்லாஹ் பின் அதிக் கூறுகிறார்: நான் எனது இடத்திலிருந்து வெளியே வந்து கோட்டைக் கதவைத் திறந்து வைத்துக் கொண்டேன். தேவைப்பட்டால் அவசரமாக வெளியேறுவதற்காக அவ்வாறு செய்தேன். அப்போது அபூ ராஃபி மேல் மாடியில் இருந்தார். அவரைச் சுற்றி நிறைய பேர் இருந்தனர். அவர்களுடன் பேசிக் கொண்டிருந்தார். அவர்கள் எழுந்து சென்றதும் அமைதியாகி விட்டது. நான் மாடிப்படி ஏறி மேலே சென்றேன். எனது வழியில் வந்த வாசலை உள்ளே சென்று மூடிக் கொண்டேன். நான் அபூ ராஃபியின் அறைக்குச் சென்றதும் அவர் விளக்கை அணைத்து விட்டு உறங்கத் தயாராகிக் கொண்டிருந்தார். அறை முற்றிலும்

## திருக்குர்ஆனிலிருந்து...

நம்பிக்கை கொண்டவர்களே! நீங்கள் உங்களை (மன இச்சைகளிலிருந்து) காப்பாற்றிக் கொள்ளுங்கள். நீங்கள் நேர்வழியினைப் பெற்று விட்டால், வழிதவறிய எவனும் உங்களுக்குத் தீங்கிழைக்க மாட்டான். நீங்கள் எல்லாரும் அல்லாஹ்விடமே திரும்பிச் செல்ல வேண்டியதுள்ளது. எனவே நீங்கள் செய்ததனை அப்போது அவன் உங்களுக்கு வெளிப்படுத்துவான். **(5:106)**

A.Nasir Ahmad (அமீர், அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத், மேலப்பாளையம்)

இருட்டாக இருந்தது. நான் குரல் எழுப்பி அபூ ராஃபியை அழைத்தேன். யார் என்று அவர் கேட்டார். அந்தக் குரலை வைத்து அனுமானித்தவாறு அவர் பக்கம் சென்று ஒரு தாக்குதல் கொடுத்தேன். கடும் இருட்டாக இருந்தது. எனக்கு பயம் ஏற்பட்டது. வெட்டு தவறாகி விட்டது. அபூ ராஃபி வீல் என்று கத்தியவாறு அறையை விட்டு வெளியில் வந்தான். சிறிது நேரம் கழித்து எனது குரலை மாற்றியவாறு அறைக்குள் வந்து குரல் கொடுத்தேன். அபூ ராஃபி என்ன சப்தமாக உள்ளது? என்றேன். அவன் எனது மாற்றப்பட்ட குரலை அடையாளம் காண முடியாததால், உனது தாய் உன்னை இழக்கட்டும். இப்போதுதான் ஒரு மனிதன் என்னை வாளால் தாக்கினான் என்றான்.

நான் அவனது குரலைக் கேட்டு அருகில் சென்று மீண்டும் வாளால் தாக்கினேன். பிறகும் அவன் மரணிக்கவில்லை. பிறகு மூன்றாவதாக தாக்கி அவனைக் கொலை செய்து விட்டேன். பிறகு நான் அவசரமாக கதவைத் திறந்து வெளியே வந்தேன். நான் ஏணிப்படிக்கட்டில் இறங்கும்போது சில அடிகளே எஞ்சியிருக்கும்போது நான் முழுவதும் இறங்கி விட்டதாகக் கருதி இருட்டில் விழுந்து விட்டேன். இறுதிப் படிக்கட்டின் அருகில் விழுந்ததால் காலின் பாத எலும்பு உடைந்தது. கால் பாத எலும்பின் இணைப்பு இறங்கி விட்டது. ஆனால் நான் எனது தலைப்பாகையால் கட்டியவாறு வெளியில் வந்தேன். நான் எனக்குள் அபூ ராஃபியின் மரணத்தை உறுதி செய்யாமல் திருப்தி அடையமாட்டேன் என்று கூறிக் கொண்டேன்.

பிறகு நான் கோட்டைக்கு அருகில் மறைவாக அமர்ந்து கொண்டேன். விடிந்ததும் கோட்டையிலிருந்து, அபூ ராஃபி வணிகர் இஜாஸ் இறந்து விட்டார் என்ற ஒருவரின் குரல் என் காதில் விழுந்தது. உடனே நான் சிறிது சிறிதாக என்னுடன் இருந்தவர்களை ஒன்று சேர்த்தேன். பிறகு நாங்கள் மதீனா வந்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் அபூ ராஃபி உடைய கொலை பற்றி தகவல் கொடுத்தோம். அன்னால் எல்லா சம்பவங்களையும் கேட்டு விட்டு எங்களிடம் உமது கால் பாதத்தைக் காட்டு என்று சைக்கினை செய்தார்கள். நான் எனது கால் பாதத்தைக் காட்டினேன். அன்னார் துஆ செய்தவாறு தமது அருளுக்குரிய கரத்தினால் தடவினார்கள். எனக்கு அதுவரை எந்த வலியும் வரவே இல்லை என்பது போன்று உணர்ந்தேன்.

இன்னோர் அறிவிப்பில் வருகிறது. ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அதிக், அபூ ராஃபி மீது தாக்குதல் தொடுத்தபோது அவரது மனைவி மிகவும் வேகமாகக் கத்தினாள். இவளது குரலைக் கேட்டு மற்றவர்கள் எச்சரிக்கை அடைந்து விடக்கூடாதே என்று எனக்கு கவலை ஏற்பட்டது. உடனே நான் அவரது மனைவி மீது வாளை ஓங்கினேன். பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பெண்களை வெட்டுவதைத் தடுத்ததை நினைவில் கொண்டவாறு கொல்லும் எண்ணத்திலிருந்து விலகி வந்து விட்டேன்.

சீரத் காத்தமுன் நபிய்யீனில் எழுதப்பட்டுள்ளது. அபூ ராஃபி உடைய கொலை பற்றி அனுமதி உண்டா? என்ற விவாதத்தில் இறங்க வேண்டிய அவசியம் இல்லை. அபூ ராஃபி உடைய இரத்தம் சிந்தும் நடவடிக்கைகள் வரலாற்றில் திறந்த பக்கங்களாக உள்ளன. அதனை ஒட்டிய சம்பவங்களின் விவரமான விவாதம் ஏற்கனவே செய்யப்பட்டு விட்டது. அப்போது முஸ்லிம்கள் நாலாபுறமும் சோதனைகளுடன் துன்ப சூழலில் இருந்தார்கள். எல்லா நாடுகளும் முஸ்லிம்களை அழிக்க முயன்று கொண்டிருந்தன. அத்தகைய ஒரு நெருக்கடியான நேரத்தில் அபூ ராஃபி அரபுகளின் பல்வேறு கோத்திரங்களை இஸ்லாத்திற்கு எதிராகத் தூண்டி விட்டுக் கொண்டிருந்தார். சுருக்கம் கூறுகிறேன். முழு வரலாறு கூறவில்லை. கொலை எவ்வாறு அனுமதிக்கப்பட்டது என்பதைக் கூறுகிறேன்.

அஹ்ஸாப் போருக்குப் பிறகு அரபுக் கோத்திரத்தை ஒருமித்து மதீனா மீது தாக்குதல் தொடுக்க வைக்க அபூ ராஃபி முயற்சி செய்தார். அரபு நாட்டில் அப்போது எந்த ஆட்சியும் இருக்கவில்லை. அவர்கள் மூலம் தீர்ப்பைப் பெறுவதற்கு வழியில்லை. ஒவ்வொரு கோத்திரமும் தம் அளவில் சுதந்திரமாக இருந்தன. ஒரு சமுதாயம் தமது பாதுகாப்புக்காக தாமே ஏதாவது திட்டம் தீட்டினால் தவிர வேறு வழி இல்லாமல் இருந்தது. முந்தைய குத்பாவில் இது விளக்கப்பட்டு விட்டது. ஆட்சியே அவர்களுடையது. இந்நிலையில் சஹாபாக்கள் செய்தது முற்றிலும் சரியாகும். யுத்த நிலையில் ஒரு சமுதாயம் ஜீவமரண நிலையில் கழிக்கும்போது இத்தகைய திட்டங்கள் முற்றிலும் அனுமதிக்கப்பட்டதாக இருந்தன.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 721–724)

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் முஹம்மது பின் மஸ்லமாவை தமது கிலாஃபத் காலத்தில் ஜுஹைனா கோத்திரத்திடம் ஸகாத் வசூலிப்பதற்காக அனுப்பினார்கள். கிலாஃபத் உடைய அவையில் ஏதாவது பணியாளர் மீது புகார் கூறப்பட்டால் உமர் (ரலி) அவர்கள் அதனை ஆய்வு செய்ய இவர்களையே அனுப்புவார்கள். உமர் (ரலி) அவர்களுக்கு அவர் மீது பெரும் நம்பிக்கை இருந்தது. அரசு வசூலுக்காக முஹம்மது பின் முஸ்லமாவையே நியமித்தார்கள். பல்வேறு பகுதிகளில் உமர் (ரலி) அவர்கள் கிலாஃபத்திற்குட்பட்ட பகுதிகளின் பிரச்சனைகளை தீர்த்து வைக்க அனுப்பி வைத்தார்கள்.

கூபாவில் சஅத் பின் அபீ வக்காஸ் ஓர் அரண்மனை அமைந்தார்கள். அதனை மேற்பார்வை செய்வதற்காக இவர் உமர் (ரலி) அவர்களுடைய பிரதிநிதியாக இருந்தார்கள். அது சம்பந்தமாக அறிவிப்புகள் இவ்வாறு கிடைக்கின்றன. உமர் (ரலி) அவர்களுக்குத் தெரிய வந்தது. சஅத் பின் அபீ வக்காஸ் ஓர் அரண்மனையை அமைக்கிறார். அதில் ஒரு வாசல் வைத்துள்ளார். அதன் வழியாக சப்தம் கேட்கவில்லை என்று கேள்விப்பட்டு முஹம்மது பின் மஸ்லமாவை அனுப்பினார்கள். உமர் (ரலி) அவர்களுடைய வழக்கம் என்னவெனில், வழக்கமாக ஒரு பணியைச் செய்வதற்கு முஹம்மது பின் மஸ்லமாவையே அனுப்பி வந்தார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அன்னாரிடம் கூறினார்கள். சஅத்திடம் போய் அவரது வாசலை எரித்து விடு. இந்த வகையில் அவர் கூபா போய் வாசலை அடைந்து நெருப்பை மூட்டி வாசலை எரித்து விட்டார். சஅதுக்கு இது தெரிய வந்து வெளியில் வந்தார். முஹம்மது பின் மஸ்லமா எல்லா விஷயங்களையும் கூறினார்கள்.

(அல் அஸாபா ஃபீ தமீஸுல் சஹாபா தொகுதி 6 பக்கம் 28 முஹம்மது பின் மஸ்லமா)

ஹஸ்ரத் உஸ்மான் உடைய ஷஹாதத்திற்குப் பிறகு ஹஸ்ரத் முஹம்மது பின் மஸ்லமா பற்றி வருகிறது. அவர் உஸ்மான் உடைய ஷஹாதத்திற்குப் பிறகு தனிமையில் காலம் கழித்தார். மரத்தால் ஆன வாள் செய்து கொண்டார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எனக்கு கட்டளையிட்டார்கள்.

## திருக்குர்ஆனிலிருந்து...

நீ அவர்களுக்குத் தண்டனை வழங்கினால் அவர்கள் உனது அடியார்களே (அல்லவா?). நீ அவர்களை மன்னிக்க நினைத்தால் நீ மிக்க வல்லமையுள்ளவனும், மிகவும் நுட்பமான ஞானங்களைக் கொண்டவனுமாவாய். (5:119)

M.Sabahul Islam & Mohaideen Ali, Melapalayam

முஹம்மது பின் மஸ்லமா கூறுகிறார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு வாள் எனக்கு பரிசு அளித்தார்கள். அதனை வைத்து இணை வைப்பவர்களுடன் அறப்போர் செய்யுங்கள். அவர் உம்முடன் யுத்தம் செய்யும் வரை செய்யுங்கள். முஸ்லிம்கள் ஒருவரை ஒருவர் கொல்வதைக் கண்டால் இந்த வாளை ஒரு பாறையில் கொண்டு போய் அடித்து விடு. அது உடையும் வரை செய். பிறகு வீட்டில் அமர்ந்து கொள். உன்னிடம் ஏதாவது தவறு செய்பவரின் கை வரும் வரை அல்லது மரணம் வரும் வரை அவ்வாறு செய். ஆகவே அவர் அவ்வாறே செய்தார். குழப்பங்களிலிருந்து விலகி இருந்தார். ஜமல் (ஒட்டகம்) போர் ஷிஃபின் போர் ஆகியவற்றில் பங்கெடுக்கவில்லை. (அஸதுல் காபா தொகுதி 4 பக்கம் 319)

ஸுனைப் பின் உஸைர் அறிவிக்கிறார்: நாங்கள் ஹஸ்ரத் ஹுதைபாவிடம் அமர்ந்திருந்தோம். அவர், நான் ஒரு மனிதரை அறிவேன். அவரை எந்தக் குழப்பமும் சிறிதும் நஷ்டம் விளைவிக்க இயலாது என்று கூறினார். நாங்கள் அவர் யார் என்று கேட்டோம். ஹஸ்ரத் ஹுதைபா, ஹஸ்ரத் முஹம்மது பின் மஸ்லமா அன்ஸாரி ஆவார்கள் என்று கூறினார்.

பிறகு ஹஸ்ரத் ஹுதைபா மரணமடைந்து விட்டார்கள். குழப்பம் வெளிப்பட்டு விட்டது. மதீனாவை விட்டு வெளியேறியவர்களுடன் சேர்ந்து வெளியேறின. நான் தண்ணீர் உள்ள ஓரிடத்தை அடைந்தேன். அங்கு ஒரு சிதைந்த கூடாரத்தை கண்டேன். அது ஒருபுறம் அழிந்து விட்டது. அதன் உள்ளே காற்று நுழைந்தது. இது யாருடைய கூடாரம் என்று கேட்டேன். மக்கள் இது முஹம்மது பின் மஸ்லமாவின் கூடாரம் என்றனர். நான் அவரிடம் வந்தேன். அவர் வயோதிகராக இருந்தார்கள். நான் அவரிடம், அல்லாஹ் உங்கள் மீது கருணை காட்டுவானாக. நான் பார்க்கிறேன். நீங்கள் முஸ்லிம்களில் மிகச் சிறந்தவர்களுன் ஒருவராவீர்கள். நீங்கள் உங்கள் நகரம், வீடு, உங்கள் குடும்பத்தார், அக்கம்பக்கத்தவர் இவர்களையெல்லாம் விட்டு விட்டீர்கள். நான் இவற்றையெல்லாம் தீமைகளின் மீதுள்ள வெறுப்பினால் செய்தேன் என்று கூறினார்.

(அத்தப்காத்துல் குப்ரா லாபின் சஅத் தொகுதி 3 பக்கம் 339 – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அவரது வஃபாத் பற்றியும் கருத்து வேறுபாடு உள்ளது. பல்வேறு அறிவிப்புகளின்படி ஹிஜ்ரி 43, 44, 45, 46 –களில் அவரது மரணம் நிகழ்ந்தது என்று வருகிறது. அப்போது அவர்களது வயது 77 ஆக இருந்தது. அவரது ஜனாஸா தொழுகையை மர்வான் பின் ஹகம் தொழ வைத்தார். அவர் மதீனாவின் அமீராக இருந்தார். அறிவிப்பில் ஒருவர் அவரை இவ்வாறு ஷஹீதாக்கி விட்டார் என்ற குறிப்பு உள்ளது.

(அஸதுல் காபா ஃபீ மஃரூஃபத்துஸ் சஹாபா தொகுதி 5 பக்கம் 107 முஹம்மது பின் மஸ்லமா – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & அல்இஸ்திஆப் ஃபீ மஃரூஃபத்துல் அஸ்ஹாப் தொகுதி 3 பக்கம் 433 முஹம்மது பின் மஸ்லமா – 2010 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

இவ்வாறு அவரது குறிப்பு முடிவு பெற்றது.

தொழுகைக்குப் பிறகு ஒரு ஜனாஸா ஹாஸிர் (கொண்டு வரப்பட்ட ஜனாஸா) தொழுகை நடத்துவேன். கண்ணியத்திற்குரிய தாஜுத்தீன் சாஹிப். இவர் கண்ணியத்திற்குரிய சத்ருத்தீன் சாஹிப் உடைய மகன் ஆவார். 10 பிப்ரவரி அன்று தமது 84 –வது வயதில் மரணமடைந்தார். இன்னா லில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன்.

மர்ஹூம் அல்லாஹ்வின் அருளால் வஸிய்யத் செய்தவராக இருந்தார். இவர் உகாண்டாவில் பிறந்தார். 1967 –ல் யூ.கே மாற்றமானார். 1984 ஆம் ஆண்டு இஸ்லாமாபாத்தில் நிலம் வாங்கப்பட்டபோது மர்ஹூம் இஸ்லாமாபத்தில் பணி செய்வதற்காக தம்மை ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களிடம் ஒப்படைத்தார்கள். பிறகு 22 வருடங்கள் இஸ்லாமாபாத்தில் மிகவும் மனத்தூய்மையுடன் பெரும் தொண்டு செய்யும் வாய்ப்பு பெற்றார். இஸ்லாமாபாத்தில் முதல் ஜல்ஸாவுக்கான ஏற்பாட்டிலிருந்து கடைசி ஜல்ஸா வரை சேவை செய்தார்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய விருந்தினர்களுக்கு சேவை செய்தார். எல்லா வகையான டெக்னிகல் பணிகளும் செய்ய அறிந்திருந்தார். இவருக்கு இஸ்லாமாபாத்தில் இரவும் பகலும் எல்லா வகையான பணியும் செய்வதற்கு வாய்ப்பு கிடைத்தது. Electric, Plumbing, Sanitary, மர வேலைகள் எல்லாம் செய்யக்கூடியவராக இருந்தார். மர்ஹூம் தொழுகை, நோன்புகளில் பேணுதல் உள்ளவர். மார்க்கவாதி. கட்டுப்படக்கூடியவர், இனிமையாகப் பழகுபவர், கிலாஃபத்துடன் ஆழிய தொடர்பு கொண்டவர்.

இவரது மகன் வழிப்பேரன் முதப்பருத்தீன் சாஹிப் யூ.கே ஜாமிஆவில் தேர்ச்சி பெற்றார். MTA –வில் தற்போது பணி செய்கிறார். அவர் எழுதுகிறார்: இஸ்லாமாபாத்தில் இருக்கக்கூடிய பெரும்பாலார் கூறுகின்றனர். இவர் மிகவும் உழைப்புள்ளவர். தாதா ஜான் எப்போதும் கூறுவார். அவர் இஸ்லாமாபாத் வரும்போது முற்றிலும் தனியாக இருந்தார்களாம். ஆரம்பத்தில் மின்சாரமோ, ஹீட்டிங்கோ இருந்ததில்லை. பெரும் சிரமமான காலமாக இருந்தது. பிறகும் ஜமாஅத் மற்றும் காலத்தின் கலீஃபாவுக்காக தியாகம் செய்யும் வாய்ப்பு கிடைத்ததற்காக மகிழ்ச்சி அடைந்தார்கள். குறித்த நேரத்தில் தொழுவது, உழைத்துப் பணி செய்வது, விருந்தோம்பல் ஆகியவை அவரிடம் இருந்த சிறப்புப் பண்புகள் ஆகும். இன்னும் எழுதுபவர்களும் கூட இதே சிறப்புகளை எழுதியுள்ளனர்.

முஜீப் சியால்கோட்டி சாஹிப் கூறுகிறார்கள்: இஸ்லாமாபாத்தில் ஒர்க் ஷாப் உருவாக்கினார். மிஷின்களை வைத்து பணி செய்வதில் நிபுணராக இருந்தார். இலண்டனின் பல கம்பெனிகளுடன் தொடர்பு வைத்திருந்தார். இஸ்லாமாபாத்தின் ஒவ்வொரு வீட்டையும் ஒவ்வொன்றாக குடியிருக்கத் தகுந்ததாக ஆக்கினார். தமது குழுவை உருவாக்கவும் அறிந்திருந்தார். குளிரிலும் வெயிலிலும் மும்முரமாகப் பணி செய்வார். பழைய பொருட்களைச் சரி செய்து புத்தம்புதியது போன்று ஆக்கி விடுவார். உழைத்துப் பணி செய்பவர். பிறகு எப்போதும் மகிழ்ச்சியுடன் இருப்பார். எனக்காக துஆ செய்யுங்கள் போதும் என்று கூறுவார். இஸ்லாமாபாத்தில் இருக்கும்போது ஒரு சிறிய அறையில் இருந்தார். அதனை பொருட்படுத்தியதில்லை. மனைவி மக்கள் இலண்டனில் இருந்தனர். அவர்கள் அவரிடம் வந்து செல்வார்கள்.

அல்லாஹ் அவருக்கு மன்னிப்பையும் ரஹ்மத்தையும் வழங்குவானாக. இவரது பிள்ளைகளையும் இவரைப் போன்றே தூய்மை மற்றும் பற்றில் வளரச் செய்வானாக. அவர்களுக்கு பொறுமை மற்றும் தைரியம் வழங்குவானாக.

## திருக்குர்ஆனிலிருந்து...

நம்பிக்கை கொண்டவர்களே! அல்லாஹ் உங்களுக்கு அனுமதித்துள்ள நல்லவற்றை ஆகாதவையாக ஆக்கிக் கொள்ளாதீர்கள். மேலும் (இறைவனால் ஏற்படுத்தப்பட்ட) வரம்பை மீறாதீர்கள். வரம்பு மீறுவோரை நிச்சயமாக அல்லாஹ் நேசிப்பதில்லை. (5:88)

A.Shamsul Alam காயித், மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா, மேலப்பாளையம்

# ஜுமுஆ பேருரை

முன்னறிவிப்பு என் மூலமாக நிறைவேறியது

**இப்போது இஸ்லாத்தின் எதிரிகள் மீது சான்றுகளை முழுமையாகப் பூர்த்தி செய்து விட்டான். இஸ்லாம் இறைவனது உண்மை மார்க்கம் என்ற விஷயத்தை வெளிப்படுத்திக் காட்டி விட்டான். அதுபோன்று முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அவனது உண்மையான ரஸூல் ஆவார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அல்லாஹ்வினால் உண்மையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் ஆவார்கள்**

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் மகனான ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூது அஹ்மது (ரலி) அவர்கள் மூலமாக வாக்களிக்கப்பட்ட மகன் தொடர்பான முன்னறிவிப்பு நிறைவேறியது மற்றும் இந்த முன்னறிவிப்பின் நோக்கம் மற்றும் குறிக்கோள் மற்றும் இது தொடர்பாக அஹ்மதிய்யா ஜமாஅத்தின் உறுப்பினர்கள் மீதுள்ள பொறுப்புகள் தொடர்பான குறிப்பு**

**அவர் உட்புற மற்றும் வெளிப்புற அறிவுகளால் நிரப்பப்படுவார் என்ற முன்னறிவிப்பு நிறைவேறியது தொடர்பாக ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களின் பணிகள் தொடர்பான குறிப்பு**

**ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களின் நூல்கள், சொற்பொழிவுகள் அடங்கிய அன்வாருல் உலூம் என்ற நூலை படிப்பதன் பக்கம் ஹுஸூர் அவர்கள் கவனமூட்டினார்கள்**

செய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **லண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசலில் 21 பிப்ரவரி 2020** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1399 -ஆம் ஆண்டு **தப்லீக்** மாதம் **21 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيْكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُوْلُهُ

أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ-

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ- الرَّحْمٰنِ الرَّحِيْمِ- مٰلِكِ يَوْمِ الدِّيْنِ- إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ-

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ- صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

அஹ்மதிய்யா ஜமாஅத்தில் பிப்ரவரி 20 ஆம் தேதி முஸ்லிஹ் மவ்வூது பற்றிய முன்னறிவிப்பின் அடிப்படையில் குறிப்பாக நினைவு கூறப்படுகிறது. ஜமாஅத்துகளில் முஸ்லிஹ் மவ்வூது பற்றிய கூட்டங்கள் நடத்தப்படுகின்றன. நான் முதலிலும் இவ்விஷயம் குறித்து விளக்கம் தந்துள்ளேன். ஆனால் மீண்டும் விளக்கம் தருவது புதிதாக ஜமாஅத்திற்கு வருபவர்கள் மற்றும் குழந்தைகளுக்காகவே ஆகும்.

முஸ்லிஹ் மவ்வூது தினம் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் ஆகிய முஸ்லிஹ் மவ்வூது உடைய பிறப்பை நினைவு கூருவதற்காகக் கொண்டாடப்படுவதில்லை. மாறாக, ஒரு முன்னறிவிப்பு நிறைவேறியதை நினைவுகூரும் விதத்தில் கொண்டாடப்படுகிறது. அந்த முன்னறிவிப்பை இஸ்லாத்தின் பெருமையை நிலைநாட்டுவதற்காக அல்லாஹ்வுடைய இல்ஹாம் பெற்று மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் செய்திருந்தார்கள். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது பிறப்பதற்கு மூன்று ஆண்டுகள் முன்பு இந்த முன்னறிவிப்பு செய்யப்பட்டது. இதில் இஸ்லாத்தின் ஒரு சேவகர் மற்றும் வாக்களிக்கப்பட்ட மகன் பற்றி முன்னறிவிக்கப்பட்டது. அது எதிரிகளுக்கு அடையாளமாக செய்யப்பட்டது. நேற்று 20 பிப்ரவரி ஆகும். இந்த முன்னறிவிப்பு செய்யப்பட்டு 134 வருடங்கள் ஆகி விட்டன. நூறு வருடங்களை விட அதிகமான காலத்திற்கு முன்னர் நிறைவேறிய அடையாளமாகும்.

எவ்வாறிருப்பினும், நான் கூறியதுபோன்று இதன் அடிப்படையில் கூட்டங்களில் முன்னறிவிப்பின் பல்வேறு கோணங்களையும், சிறப்புகளையும் வாக்களிக்கப்பட்ட மகன் குறித்து கூறப்பட்டவற்றை ஓரளவுக்கு எடுத்துக் கூறப்படுகிறது. ஆனால் ஓரிரு மணி நேர கூட்டத்தில் எல்லா நிறைவேறிய கருத்துக்கள் மற்றும் முக்கியத்துவங்களையும் முழுவதுமாக எடுத்துக் கூறிவிட முடியாது. எனவே கூட்டங்கள் முழுமையாக இவற்றை அளவிட முடியாது என்றால் பிறகு ஒரு குத்பாவில் அதன் பல்வேறு பகுதிகளை எடுத்துக் கூறுவது முற்றிலும் இயலாத காரியமாகும். முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் சுயமே தாம் கூறிய சில கருத்துக்களையும் விளக்கங்களையும் கூறலாம் என்று நினைத்தேன். அதிலிருந்து சில ஆதாரங்களை எடுத்து வைக்கிறேன். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களுடைய கருத்துக்களைப் படிப்பதில் ஒரு ரசனையும் ஈர்ப்பும் உள்ளது. எவ்வாறிருப்பினும், பல்வேறு ஆதாரங்கள் மூலம் தெளிவாவது இந்த முன்னறிவிப்பு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய முன்னறிவிக்கப்பட்ட மகனிடம் எவ்வளவு மகத்தான முறையில் நிறைவேறியுள்ளது என்றும் அதன் ஆழம் எவ்வளவு என்பதையும் கணிக்க முடியும்.

எவ்வாறிருப்பினும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய வார்த்தைகளில் முன்னறிவிப்பின் சொற்களைக் கீழே எடுத்துக் கூறுகிறேன். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தமது முன்னறிவிப்பைப் பற்றிக் குறிப்பிட்டவாறு எதிரிகளுக்கு என்னென்ன முன்னறிவிப்புகள் உள்ளன என்று விளக்கியவாறு முஸ்லிஹ் மவ்வூது பற்றிய முன்னறிவிப்பைக் கூறுகிறார்கள். முதலில் அடையாளங்களும் கம்பீரமும் மிக்க அல்லாஹ்வின் முன்னறிவிப்பு அந்த மேன்மேலும் கருணை காட்டுபவனும் சிறப்புமிக்கவனுமாகிய அந்த இறைவனின் சான்றான்மையும் மேன்மையும் கொண்டவனும், ஒவ்வொரு பொருளின் மீதும் ஆற்றல் உள்ளவனுமாகிய கம்பீரம் பொருந்திய பெயர் கொண்ட அந்த கண்ணியமிக்க வல்லமையுள்ள இறைவன் இல்ஹாம் மூலமாக என்னை நோக்கி இவ்வாறு கூறினான்:

“நீ என்னிடம் கேட்டதற்கிணங்க ஓர் கருணையின் அடையாளத்தை நான் உனக்கு தருகின்றேன். நான் உன்னுடைய மன்றாடல்களைக் கேட்டேன். மேலும் உனது துஆக்களுக்கு என்து ரஹ்மத்தினால் அவை ஏற்றுக் கொள்ளப்படும் தகுதியை வழங்கினேன். ஹோஷியார்பூர் மற்றும் லூதியானாவிற்கு நீர் மேற்கெண்ட உமது பயணத்தை உனக்கு அருளுக்குரியதாக ஆக்கி விட்டேன். ஆகவே உனக்கு இறைவனின் வல்லமை, கருணை, நெருக்கம் ஆகியவற்றின் அடையாளம் கொடுக்கப்படுகிறது. அருள் மற்றும் பேருபகாரத்தின் அடையாளம் உமக்கு வழங்கப்படுகிறது. மேலும் வெற்றியின் திறவுகோல் உமக்கு கிடைக்கின்றது. வெற்றியாளரே! உம்மீது சாந்தியும், சமாதானமும் உண்டாவதாக! இறைவன் இதை கூறினான். இதன் மூலம் வாழ்க்கையை விரும்புபவர்கள் மரணத்தின் பிடியிலிருந்து இரட்சிப்புப் பெற

வேண்டும். கல்லறையில் புதைந்து கிடப்பவர்கள் வெளியில் வர வேண்டும். அதன் மூலம் இஸ்லாம் மார்க்கத்தின் சிறப்பும், இறைவனின் வார்த்தையின் உயர் தகுதியும் மக்கள் மீது வெளிப்படவேண்டும். அதன் மூலம் உண்மை அதன் அனைத்து பரக்கத்துகளுடன் வர வேண்டும். மேலும் பொய் தனது அனைத்து தீய சகுனங்களுடன் ஓடி விட வேண்டும். மேலும் அதன் மூலம் நான் வல்லமையுள்ளவன்; எதனை விரும்புகின்றேனோ அதனை செய்பவன் என்பதை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். எவர்களுக்கு இறைவனின் இருப்பின் மீது நம்பிக்கை இல்லையோ, மேலும் எவர்கள் இறைவனையும், இறைவனின் மார்க்கத்தையும், இறைவனின் தூதர் ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களையும் மறுத்தல் மற்றும் பொய்ப்படுத்துதல் போன்ற பார்வையுடன் பார்க்கின்றார்களோ அவர்களுக்கு ஒரு திறந்த அடையாளம் கிடைக்க வேண்டும். குற்றவாளிகளின் திட்டமும் வெளிப்பட்டு விட வேண்டும்.

ஆக, உமக்கு நற்செய்தி வழங்கப்படுகின்றது. ஒரு அழகான தூய மகன் உமக்கு வழங்கப்படுவார். ஒரு தூய புதல்வர் உமக்கு கிடைப்பார். அந்தப் புதல்வன் உமது வித்திலிருந்து தோன்றியவராகவும், உமது சந்ததி மற்றும் வம்சத்தைச் சார்ந்தவராகவும் இருப்பார். அல்லாஹ் இங்கு எல்லா விதமான சந்தேகங்களையும் களைந்து விட்டான். பின்னர் வரக்கூடிய சந்ததிகளில் அவர் பிறக்கமாட்டார். மாறாக, ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய மகனாக இருப்பார் எனக் கூறுகிறான்.

அழகிய தூய மகன் உமது விருந்தாளியாக வருகின்றார். அவரது பெயர் இம்மானுவேல் மற்றும் பஷீராகவும் இருக்கின்றது. அஞ்சாமே ஆத்தமில் அரபியில் எழுதப்பட்டுள்ள முழு முன்னறிவிப்பில் அன்முவாயில் என எழுதப்பட்டுள்ளது. அவருக்கு புனித ஆன்மா வழங்கப்பட்டுள்ளது. அவர் அகத்திலிருந்தும் தூய்மை அடைந்தவராவார். அவர் அல்லாஹ்வின் ஒளி ஆவார். விண்ணிலிருந்து வருகின்ற அவர் அருளுக்குரியவர் ஆவார். அவருடன் அருள் இருக்கின்றது. அந்த அருள் அவருடன் சேர்ந்து வரும். அவர் ஆற்றல் உடையவராகவும், மகத்துவமிக்கவராகவும், செல்வம் படைத்தவராகவும் இருப்பார்.

அவர் உலகத்திற்கு வருவார். தனது குணப்படுத்தும் தன்மையாலும் உண்மையான ஆன்மாவின் பரக்கத்தாலும் பலரையும் நோய்களிலிருந்து குணப்படுத்துவார். அவர் அல்லாஹ்வின் வார்த்தையாவார். ஏனென்றால் இறைவனின் கருணையும் அவனது தன்மான உணர்வும் அவரை மகத்துவமிக்க வார்த்தைகளுடன் அனுப்பி இருக்கின்றது. அவர் மிகுந்த புத்திகூர்மை உள்ளவராகவும், சிந்தித்துச் செயல்படும் ஆற்றல் மிக்கவராகவும் இருப்பார். மென்மையான உள்ளம் கொண்டவராகவும் இருப்பார். வெளிப்புற மற்றும் உட்புற அறிவுகளால் அவர் நிரப்பப்படுவார். அவர் மூன்றை நான்காக்குபவர் ஆவார்.

திங்கட்கிழமை, அருளுக்குரிய திங்கட்கிழமை. உமது பாசத்திற்குரிய அப்புதல்வர் மதிப்பிற்கும், மேன்மைக்கும் உரியவர் ஆவார். அவரிடமிருந்தே முதலும் இறுதியும் வெளிப்படும். அவரிடமிருந்தே உண்மையும் உயர்வும் வெளிப்படும். இறைவனே விண்ணிலிருந்து இறங்கி வந்தது போன்று அது இருக்கும். அவரது வருகை அருளுக்குரியதாக இருக்கும். அது இறைவனின் கம்பீரம் வெளிப்படுவதற்குக் காரணமாக அமையும். ஒளி வருகின்றது. அதனை இறைவன் தனது திருப்தியின் நறுமணம் கமழும்படி செய்வான். நாம் நமது ஆவியை அவர் மீது இடுவோம். இறைவனது நிழல் அவரது தலைமேல் இருக்கும்.

அவர் மிக விரைவாக வளர்வார். கைதிகளின் விடுதலைக்குக் காரணமாக இருப்பார். பூமியின் எல்லை வரை அவரது புகழ் பரவும். சமுதாயங்கள் அவரிடமிருந்து அருள்களைப் பெறும். அப்போது தனது இறுதி நோக்கத்தை நிறைவு செய்தவாறு அவர் வானத்தின் பக்கம் உயர்த்தப்படுவார். வகான அம்ரன் மக்ஸிய்யா – இது விதிக்கப்பட்ட ஒன்றாகும்.''

(ஆயினாயே கமாலாத்தே இஸ்லாம், ரூஹானி கஸாயின் தொகுதி 5 பக்கம் 647)

இவையே அந்த முன்னறிவிப்பின் வார்த்தைகளாகும். இது வாக்களிக்கப்பட்ட மகனின் பல்வேறு கோணங்களையும் சிறப்புகளையும் எடுத்துக் கூறுகிறது. அல்லாஹ்வின் அடையாளம் கேட்பதற்காக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தனித்திருந்தார்கள். அதன் விளைவாக இறைவன் இந்த முன்னறிவிப்பை நான் கூறியது போன்று வழங்கினான். இந்த தனித்திருந்த இடம் பற்றி குறிப்பிட்டவாறு அவர்களின் துஆ ஏற்றுக் கொள்ளப்பட்டதன் விளைவாக வெளிப்பட்ட இல்ஹாமைக் குறிப்பிட்டவாறும் இதன் விளைவாக அன்னார் முன்னறிவித்த மகன் பற்றியும் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் பற்றியும் விளக்குகிறார்கள். இன்றிலிருந்து 58 வருடங்கள் முன்பு என்று முஸ்லிஹ் மவ்வூது கூறுகிறார்கள். அன்னார் இதனைக் கூறும்போது முன்னறிவித்து 58 வருடங்கள் ஆகியிருந்தன.


அவர்கள் கூறுகிறார்கள்: இன்றோ முன்னறிவிக்கப்பட்டு 59 வது வரும் தொடங்குகிறது. 20 பிப்ரவரி 1886 –ல் இந்த ஹோஷியார்பூர் நகருக்கு அன்னார் சென்றிருந்தார்கள். இந்த ஹோஷியார்பூர் நகரின் இந்த இடத்தில் – அந்த இடத்தில் அன்னார் அப்போது இருந்தார்கள். அந்த இடத்தைச் சுட்டிக்காட்டியவாறு கூறினார்கள். இந்த இடத்தில் என் எதிரில் எத்தகைய வீடு உள்ளது எனில் அந்த வீடு இருந்த இடம் தபீலா என்றழைக்கப்பட்டது. அதன் பொருள் அது எவரது நிரந்தர தங்குமிடமும் அல்ல. மாறாக ஒரு தலைவரின் அதிகப்படியான வீடுகளில் ஒரு வீடாக அது இருந்தது. சில நேரங்களில் விருந்தாளிகள் வந்து விட்டால் அவர்களது தேவைக்கான பொருள்கள் தற்செயலாக அங்கு வைக்கப்பட்டது. தேவைக்கேற்ப விலங்குகளும் அடைத்து வைக்கப்பட்டன.

ஓர் அடையாளம் தெரியாத மனிதர் அவரை காதியான் மக்கள் கூட முழுமையாக அறிந்திருக்க மாட்டார்கள். மக்களின் எதிர்ப்பைப் பார்த்து பொதுவாகவும் இஸ்லாத்தின் நிறுவுனர் மீது கொண்ட எதிர்ப்பையும் கண்டு அந்த மனிதர், இறைவன் முன்னிலையில் தனித்திருந்து அவனிடம் உதவியும் அடையாளமும் வேண்டி அமர்ந்தார். 40 நாட்கள் மக்களை விட்டு தனித்திருந்து அவர் தனது இறைவனிடம் துஆ வேண்டினார். 40 நாட்களின் துஆவிற்குப் பிறகு இறைவன் அவருக்கு ஓர் அடையாளம் வழங்கினான்.

அந்த அடையாளம் என்னவென்றால், நான் உன்னிடம் தந்த வாக்குறுதியை நிறைவேற்றுவது மட்டுமின்றி உனது பெயரை உலகில் எல்லை வரை எட்ட வைப்பேன். இன்னும் சொல்வதாயின், இந்த வாக்குறுதியை முழுமையாக நிறைவேற்றுவதற்காக உமக்கு ஒரு மகனையும் வழங்குவேன். அவர் சில சிறப்புப் பண்புகளைக் கொண்டவராக இருப்பார். அவர் இஸ்லாத்தை உலகின் எல்லை வரை பரப்புவார். இறை வார்த்தைகளின் அடிப்படையில் புரிய வைப்பார். அவர் இறை அருளின் அடையாளமாக இருப்பார். அவர் மார்க்க மற்றும் உலகியல் அறிவுகள், இஸ்லாத்தைப் பரப்புவதற்கு அவசியமான அறிவுகள் அவருக்கு வழங்கப்படும். எந்த வகையிலாவது அவருக்கு அல்லாஹ் நீண்ட வாழ்நாளை

O.A. NIJAM 99947 57172 V.A. SAIT 99430 30230

O.A.N. DOORS & STEELS



All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Construction Chemicals.

5C/6-A, Ambai Road, Kulavanikarpuram, (opp. Karuna Clinic) Tirunelveli - 627 005.

வழங்குவான். எந்த அளவுக்கு எனில், அவர் உலகின் எல்லை வரை பிரபல்யம் அடைவார்.

(இன்று எந்த நாடுகளில் அஹ்மதிய்யா ஜமாஅத் நிலைநாட்டப்பட்டுள்ளதோ அங்கு இந்த முன்னறிவிப்பின் புகழும் மகத்தான மகன் பற்றிய முன்னறிவிப்பின் பிரபல்யமும் காணப்படுகிறது.)

(தஃவா முஸ்லிஹ் மவ்வூது கே முதஅல்லிக் புர் ஷவ்கத் இஃலான், அன்வாருல் உலூம் தொகுதி 17 பக்கம் 146–147)

இந்த மகத்தான மகன் பற்றிய முன்னறிவிப்பைக் கேட்டு எதிரிகள் தமது ஆட்சேபனையைத் தொடங்கினர். இது என்ன முன்னறிவிப்பு? எவரும் இவ்வாறு அறிவிக்க முடியும்? எனக்கு ஒரு மகன் பிறப்பான் என்று கூற முடியும் என்றனர். இதற்கும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் பதில் கூறினார்கள்.

அதனைப் பற்றி எடுத்துரைத்தவாறு முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

ஒரு பிரசுரம் வெளியிடப்பட்டது. எதிரிகள் ஆட்சேபனையைத் தொடங்கினர். 22 மார்ச் 1886 –ல் அன்னார் இன்னொரு பிரசுரம் வெளியிட்டார்கள். எதிரிகளின் ஆட்சேபனை என்னவென்றால் இதுபோன்ற முன்னறிவிப்புகளை எவ்வாறு நம்ப முடியும்? எனக்கு ஒரு மகன் பிறப்பான் என்கிறார். மக்களுக்கு மகன் பிறப்பதே இல்லையா? எங்காவது ஒருவர் வேண்டுமானால் மகன் இல்லாமல் இருக்கலாம். அல்லது ஒருவருக்கு மகள்கள் மட்டுமே இருக்கலாம். ஆனால் பொதுவாக மக்களுக்கு மகன்கள் பிறக்கத்தான் செய்கிறார்கள். அதையெல்லாம் ஒரு சிறப்பான அடையாளமாகக் கூற முடியுமா? இவருக்கு ஒரு மகன் பிறந்தாலும் கூட அதனால் உலகில் அவர் மூலம் இறைவனது சிறப்பான அடையாளம் வெளிப்பட்டதாக எவ்வாறு நிரூபணமாகும்? என்பது அவர்களின் ஆட்சேபனையாகும்.

அன்னார் இந்த ஆட்சேபனைக்குப் பதிலளித்தவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் 22 மார்ச் பிரசுரத்தில் கூறினார்கள். இது வெறுமனே முன்னறிவிப்பல்ல. மாறாக, மகத்தான வானத்தின் அடையாளமாகும். இதனை சிறப்பும் கம்பீரமும் பொருந்திய இறைவன் நம்முடைய கண்ணியத்திற்குரிய ரவூஃபுர் ரஹீமுமாகிய முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களுடைய உண்மையை நிரூபித்துக் காட்டுவதற்காக இதனை வெளிப்படுத்தி இருக்கிறான். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அந்த பிரசுரத்தில் கூறியிருந்தார்கள்.

பி ஃபழ்லிஹி தஆலா வ இஹ்ஸானிஹி வ பரகாத்திஹி ஹஸ்ரத் காத்தமுல் அன்பியா (ஸல்) அவர்கள் சிறப்புமிக்க இறைவன் எனது துஆவை ஏற்றுக் கொண்டவாறு தனது அருள் மற்றும் கருணையாலும் காத்தமுல் அன்பியா (ஸல்) அவர்களுடைய பரக்கத்தாலும் அந்த இறைவன் எனது துஆவை ஏற்றுக் கொண்டவாறு ஒரு வாழ்த்துக்குரிய ரூஹை அனுப்புவதாக வாக்களித்தான். அவரது உட்புற வெளிப்புற பரக்கத்துகள் முழு உலகிலும் பரவும் என்றான்.

எனக்கு ஒரு மகன் பிறப்பான் என்று மட்டும் கூறினாலும் கூட தன்னளவில் அது ஒரு முன்னறிவிப்பே ஆகும். ஏனெனில் ஒருவர் எவ்வளவு குறையற்றவர் ஆக இருந்தாலும் கூட அவருக்கு ஒரு குழந்தை கிடைக்கும் என்று கூற முடியாது. இரண்டாவது அறிவிப்பவரின் வயது ஐம்பதை விட அதிகமாக இருந்தது. உலகில் ஆயிரக்கணக்கானோர் இருக்கின்றனர். அவர்களுக்கு 50 வயதுக்கு மேல் குழந்தை வாய்ப்பு அடைபட்டு விடுகிறது. இன்னும் சிலருக்கு பெண் குழந்தைகள் மட்டுமே பிறந்தாலும் சிறு வயதிலேயே இறந்து போகின்றன. இந்த எல்லா சந்தேகங்களும் இந்த இடத்தில் இருக்கின்றன. முதலில் ஒரு மகன் பிறப்பான் என்று தெரிவிப்பது மனித சக்திக்கு உட்பட்டதல்ல.

இவ்வளவு ஆட்சேபனைகளையும் தாழ்மையுடன் ஏற்றுக் கொண்டவாறு அன்னார் கூறினார்கள். ஒரு மகன் பிறப்பு பற்றி சொல்வது முன்னறிவிப்பு இல்லை என்பதை ஏற்றுக் கொண்டாலும் கேள்வி என்னவெனில் நான் எப்போது ஒரு மகன் பிறப்பான் என்று செய்தி அறிவித்தேன்? எனக்கு ஒரு மகன் பிறப்பான் என்று நான் கூறவில்லை. மாறாக, நான் கூறியது என்னவென்றால் இறைவன் எனது துஆவை ஏற்றுக் கொண்டு ஒரு வாழ்த்துக்குரிய ஆன்மாவை அனுப்புவதாக வாக்களித்துள்ளான். அவரது உட்புற வெளிப்புற பரக்கத்துகள் உலகில் பரவும் என்றுதான் கூறினேன்.

(அல் மவ்வூது, அன்வாருல் உலூம் தொகுதி 17 பக்கம் 529,530)

இன்று உலகம் அதற்கு சாட்சியாகும். இந்த வாக்களிக்கப்பட்ட மகன் உலக அறிவில் பிரபல்யம் பெற்றார். இந்தியாவுக்கு வெளியில் காதியானுக்கு வெளியில் உலகிலுள்ள ஒவ்வொரு பிரச்சார நிலையமும் அன்னாரின் (முஸ்லிஹ் மவ்வூது) காலத்தில் உருவாகி இருந்தன. அந்த அமைப்புதான் இன்றும் உலகில் தொடர்கிறது. சிலர் இவ்வாறும் ஆட்சேபனை செய்கிறார்கள். முஸ்லிஹ் மவ்வூது பிற்காலத்தில் பிறக்கவிருக்கிறார். 100 வருடங்கள், 200 வருடங்கள், 300 வருடங்கள் கழித்து தோன்ற வேண்டியவர் ஆவார்.

இதற்கு விளக்கம் அளித்தவாறும் எந்த நோக்கத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அடையாளம் வேண்டினார்கள்? ஏன் அன்னாரின் காலத்திலேயே அது நிறைவேற வேண்டியதிருந்தது? என்பதை விளக்கியவாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:

முஸ்லிஹ் மவ்வூது என்பவர் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய சந்ததியிலிருந்து 300, 400 வருடங்கள் கழித்து தோன்றுவார். அங்கு அன்னாரின் சந்ததியிலிருந்து தோன்றுவார் என்றே கூறப்பட்டது என்றும் ஆனால் தற்போது வரை வரமாட்டார் என்றும் கூறுகிறார்கள். இவர்கள் இறைவனது பயம் இல்லாதவர்கள் ஆவர். காரணம் அவர்கள் முன்னறிவிப்பின் சொற்களைப் பார்ப்பதில்லை. அதன் மீது கவனம் செலுத்த வேண்டும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் எழுதுகிறார்கள்: இப்போது இஸ்லாத்தின் மீது ஆட்சேபனை செய்யப்படுகிறது. இஸ்லாம் தன்னகத்தில் அடையாளங்களை வெளிப்படுத்த சக்தி பெற்றிருக்கவில்லை என்று கூறுகின்றனர். இந்த வகையில் இஸ்லாம் உண்மை என்றால் அடையாளம் காட்டுங்கள் பார்ப்போம் என்று பண்டிட் லேக்ராம் ஆட்சேபனை செய்தார். இஸ்லாம் உண்மை எனில் அடையாளம் காட்டுங்கள் என்று இந்தர்மான் ஆட்சேபனை செய்தார். அன்னார் இறைவன் முன் குனிகிறார்கள்.

''எனது இறைவா! நீ ஓர் அடையாளம் காட்டுவாயாக. அந்த அடையாளங்கள் மூலம் அடையாளமாக வேண்டுபவர் இஸ்லாத்தை ஏற்க வேண்டும். இந்தர்மன் முராதாபாதி போன்றோர் இஸ்லாத்தை ஒப்புக் கொள்ளும் வகையில் அடையாளம் காட்டுவாயாக. இந்த ஆட்சேபனை செய்பவர்கள், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இறைவனிடம் துஆ செய்தபோது உமக்கு இன்றிலிருந்து

## திருக்குர்ஆனிலிருந்து...

போதைப் பொருள்கள், சூதாட்டம் ஆகியவற்றால் உங்களுக்கிடையே பகைமையையும், வெறுப்பையும் உருவாக்கி அல்லாஹ்வை நினைவு கூர்வதிலிருந்தும் தொழுகையிலிருந்தும் உங்களைத் தடுத்து விடவே ஷைத்தான் விரும்புகின்றான். எனவே நீங்கள் (இவற்றிலிருந்து) தவிர்ந்து கொள்ள மாட்டீர்களா? (5:92)

M.Y. Shahul Hameed, Melapalayam

300 வருடங்கள் கழித்து ஒரு மகனை வழங்குவேன். அவர் மூலம் இஸ்லாத்தின் உண்மையை நிரூபிப்பேன் என்று கூறியதாக கூறுகின்றனர்.

உலகில் எந்த மனிதனாவது இதனை அறிவுடைய கூற்றாகக் கருத முடியுமா? முழுக்க முழுக்க அறிவற்ற கூற்றாகும். ஒரு மனிதருக்கு கடும் தாகம் எடுக்கிறது. அவர் ஒரு வீட்டு வாசலில் நின்று சகோதரரே எனக்கு கடும் தாகமாக உள்ளது. இறைவனுக்காக எனக்கு சிறிது தண்ணீர் புகட்டுங்கள் என்று கேட்கிறார். வீட்டுக்காரர், சாஹிபே! பதறாதீர். நான் அமெரிக்காவுக்குக் கடிதம் எழுதியிருக்கிறேன். இந்த வருடக் கடைசியில் உயர் தர எஸ்ஸென்ஸ் வந்து விடும்.

அடுத்த வருடம் உங்களுக்கு சர்பத் செய்து தருகிறேன் என்று பதில் தருகிறார். பைத்தியத்திலும் பைத்தியம் கூட இதேபோன்று கூறமாட்டார். இறைவனைப் பற்றி பைத்தியத்திலும் பைத்தியம் கூட இத்தகைய ஒரு கூற்றைச் சுமத்த மாட்டார். பண்டிட் லேக்ராம் முன்ஷி இந்தர்மன் முராதாபாதி மற்றும் காதியானின் இந்துக்கள் எல்லாம் இஸ்லாம் பற்றிய வாதம் அதன் இறைவன் அடையாளம் காட்டக்கூடியவன் என்பது பொய்யான அடிப்படையற்ற வாதமாகும் என்றும் இந்த வாதத்தில் ஏதாவது உண்மை இருந்தால் ஓர் அடையாளம் காட்டுங்கள் என்று கூறுகின்றனர்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இறைவன் முன் குனிகின்றார்கள். இறைவா! உன்னிடமிருந்து ஒரு ரஹ்மத்தின் அடையாளம் காட்டுவாயாக என்று கேட்கிறார்கள். உன் நெருக்கத்தின் அடையாளம் காட்டுவாயாக என்று கேட்கிறார் எனில் அந்த அடையாளம் விரைவாக கிடைக்க வேண்டும். அதனைப் பார்க்க அவர்கள் உயிருடன் இருக்க வேண்டும். ஏனெனில் அவர்கள் அடையாளம் கேட்டிருந்தார்கள். இந்த வகையில் அவ்வாறே நடந்தது. 1889 –ல் எனது பிறப்பு அல்லாஹ்வின் முன்னறிவிப்பிற்கேற்ப நிகழ்ந்தது. அப்போது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இந்த அடையாளம் கேட்ட பிறகு அல்லாஹ்வின் அடையாளம் வளர்ந்து கொண்டே சென்றது.

(மே ஹீ முஸ்லிஹ் மவ்வூது கி பேஷ்கோயி கா மிஸ்தாக் ஹுன், அன்வாருல் உலூம் தொகுதி 17 பக்கம் 222,223)

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் வாழ்விலும் இஸ்லாத்தின் மீது ஆட்சேபனை செய்தவர்களின் வாழ்நாளிலும் வெளிப்படுவது அவசியமாக இருந்தது. அது வெளிப்பட்டது.

இன்னொரு முக்கிய விஷயம் என்னவெனில் இந்த முன்னறிவிப்பின் நோக்கம் என்ன என்பதும், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் காலத்தில் இது ஏன் தேவைப்பட்டது என்பதும் தெரிய வேண்டிய விஷயமாகும். அன்னார் விளக்குகிறார்கள். அன்னாரின் பௌதீக மகன் பிறக்க வேண்டிய அவசியம் என்ன? அவரிடம் இந்த முன்னறிவிப்புகள் நிறைவேற வேண்டிய அவசியம் என்ன? என்பது பற்றி அன்னார் ஆட்சேபனைகளைப் பற்றி குறிப்பிட்டவாறு கூறுகிறார்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் 20 பிப்ரவரி 1886 பிரசுரத்தில் கூறினார்கள்: அல்லாஹ் என்னிடம் வெளிப்படுத்தினான். அது உலகின் முன் வைக்கப்பட்டது. காரணங்கள் இந்த முன்னறிவிப்பில் கூறப்பட்டுள்ளது. வாழ்வைத் தொலைத்தவர்கள் மரணத்திலிருந்து ஈடேற்றம் பெறுவதற்கும், மண்ணறையில் அடக்கப்பட்டவர் வெளியில் வருவதற்கும் ஆகும். அதாவது ஆன்மீகமாக இறந்தவர்கள் உயிர் பெறவும் செய்ய வேண்டும்.

இவை 400 வருடங்கள் கழித்து நடக்கும் என்று கருதினால் – மேலும் இதனை விளக்கியவாறு கூறுகிறார்கள்: அதன் பொருள் என்னவெனில், இன்று வாழ்வைத் தொலைத்தவர்கள் அவ்வளவுதான். 400 வருடங்கள் கழித்து உயிர்ப்பிக்கப்படுவர் என்றால் அந்த சில்லா (தனித்திருத்தல்) முற்றிலும் தவறானதாகும். அந்த தனித்திருந்து செயல்பட்டதன் நோக்கம் இன்று இஸ்லாமிய மார்க்கத்தை மறுப்பவர்களின் முன் இஸ்லாம் பற்றி உயிருள்ள அடையாளம் வெளிப்பட வேண்டும். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடைய அற்புதத்தை மறுப்பவர்களுக்கு புத்தம் புதிய அடையாளம் கிடைக்க வேண்டும். அதன் மூலம் இஸ்லாம் மற்றும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு ஆதரவாக அல்லாஹ் தனது அடையாளங்களை வெளிப்படுத்த வேண்டும்.

இது குறித்து அந்த இல்ஹாமிய முன்னறிவிப்பு அதன் நோக்கங்களை வெளிப்படுத்திக் காட்டுகிறது. அதாவது அது கூறுகிறது. வாழ்வைத் தொலைத்து விட்டவர்கள் மரணத்தின் பிடியிலிருந்து தப்பிக்க வேண்டும். கபர்களில் புதைக்கப்பட்டவர்கள் வெளியில் வர வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. இவர்களின் கொள்கை சரியென்றால், முஸ்லிஹ் மவ்வூது 300–400 வருடங்கள் கழித்து வருவார் என்று கூறுகின்றார்கள் எனில் இந்த சொற்றொடருக்குப் பொருள் இந்த முன்னறிவி;பபு செய்யப்பட்டதன் பொருள் இன்று வாழ்வைத் தொலைத்தவர்கள் மரணித்துப் போகட்டும். 400 வருடங்கள் கழித்து அவர்களின் சந்ததிகளிலிருந்து சிலர் உயிர்ப்பிக்கப்படுவார்கள் என்பதாகும். எவராவது இந்த செற்றொடரை ஏற்பாரா? இந்த முன்னறிவிப்பு செய்யப்பட்டது இஸ்லாத்தின் கண்ணியம் வெளிப்படுவதற்காக ஆகும்.

கலாமுல்லாஹ் (அல்லாஹ்வின் வார்த்தை) –வின் மதிப்பு மக்களிடம் வெளிப்படுவதற்காக ஆகும். இந்த சொற்றொடருக்கு சரியான பொருள் இதுவெனில் அதற்குப் பொருள் இஸ்லாம் மார்க்கத்தின் கண்ணியம் இப்போது மக்களிடம் வெளிப்படாது. அதுபோன்று அல்லாஹ்வின் வார்த்தையின் மதிப்பு இப்போது மக்களிடம் வெளிவராது. மேலும் அல்லாஹ் இந்த முன்னறிவிப்பைக் கொடுத்தது இஸ்லாம் மார்க்கத்தின் கண்ணியம் அல்லது இறை வார்த்தைகளின் மதிப்பு இன்றிலிருந்து 300–400 வருடங்கள் கழித்துதான் வெளிவரும்.

இவர்களும் இறந்து இவர்களின் பிள்ளைகளும் இறந்து அவர்களின் பிள்ளைகளும் இறந்து விட்ட பிறகு தான் மக்களிடம் வெளிப்படுத்தப்படும். அப்போது பண்டிட் லேக்ராமும் இருக்க மாட்டார். இந்தர்மன் முராதாபாதியும் இருக்க மாட்டார். அவர்களின் பிள்ளைகளும் இருக்காது. அவர்களின் பிள்ளைகளின் பிள்ளைகளும் இருக்காது. அப்போதுதான் கலாமுல்லாஹ்வின் மதிப்பு மக்களிடம் வெளிப்படுத்திக் காட்டப்படும் என்றால் இப்போது கூறுங்கள்? எவராவது இதனை சரியானது என்று கூறுவாரா?

மூன்றாவது இந்த முன்னறிவிப்பு செய்யப்படக் காரணம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: உண்மை தனது பரக்கத்துகளுடன் வர வேண்டும். பொய் தனது சகுனங்களுடன் ஓடி விட வேண்டும். இதன் பொருளும் வெளிப்படையானது. இப்போது உண்மை பலவீனமாக உள்ளது. பொய் மேலோங்கி உள்ளது. இறைவன் ஓர் அடையாளத்தை வெளிப்படுத்த விரும்புகிறான். அதன் மூலம் அறிவுப்பூர்வமாக சிந்தனைப்பூர்வமாக இஸ்லாம் மீது சான்றுகள் பூர்த்தியாக வேண்டும். நிர்பந்தமாக இஸ்லாம் உண்மையானது என்று ஒப்புக் கொள்ள வேண்டியவர்கள் ஆவர். இதற்கு எதிராக நிற்கிற எல்லா மதங்களும் பொய்யானவை என்பதாகும்.

இந்த முன்னறிவிப்பின் இந்த நான்காவது நோக்கம் கூறப்பட்டுள்ளது. நான் சக்தியுள்ளவன். நான் விரும்புவதை செய்கிறேன் என்று மக்கள் அறிவதற்கும் இதனை செய்கிறேன். இதிலிருந்து தெரிய வருவது என்னவென்றால் மக்கள் இறைவனை எப்போது சக்தியுள்ளவன் என்று ஏற்பார்கள்? 300–400 வருடங்களுக்குப் பிறகு அடையாளம் வெளிப்படும் என்று கூறினால் நீங்கள் ஒரு விஷயத்தை ஏற்றுக் கொள்ள வேண்டிய நிர்பந்தத்திற்கு ஆளாவீர்கள். இஸ்லாத்தின் இறைவன் சக்தியுள்ளவன் என்பதற்கு பண்டிட் லேக்ராம் போன்றவர்கள் என்ன முக்கியத்துவம் தருவர்? 400

வருடங்கள் கழித்து இறைவனை சக்தியுள்ளவன் என்று நீங்கள் ஏற்பீர்கள் என்று கூறினால் இஸ்லாம் மார்க்கத்தின் மீது ஆட்சேபனை செய்தவர்கள், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடைய அடையாளங்களைப் பொய்யாக்கியவர்கள், இஸ்லாத்தை செத்த மார்க்கமாகக் கருதியவர்கள் மீது என்ன ஆதாரம் இருக்கும்?

400 வருடங்கள் கழித்து நிறைவேற வேண்டிய முன்னறிவிப்பைப் பார்த்து இவர்கள் எவ்வாறு இறைவன் சக்தியுள்ளவன் என்ற நம்புவார்கள்? இந்த வாயளவிலான வாதங்களை எங்களால் ஏற்க முடியாது என்றே கூறுவர். 400 வருடங்கள் கழித்து அவ்வாறு நடக்கும் என்கிறீர்களா? இதனைத்தான் ஒவ்வொருவரும் கூற முடியுமே? எங்கள் முன் அடையாளம் காட்ட வேண்டும். அதன் மூலம் இஸ்லாத்தின் இறைவன் வல்லமை மிக்கவன் என்று நிரூபிக்க வேண்டும் என்பார்கள். பிறகு இவர்களின் முன்னால் இது நிறைவேற வேண்டிய முன்னறிவிப்பாக இருந்தது.

நாம் கூறியதன் நோக்கம் மக்கள் திட உறுதி கொள்ள வேண்டும். உங்களுடன் உள்ளேன் என்று கூறுவதாகும். அதாவது அல்லாஹ் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடன் இருக்கிறான் என்று காட்டுவதாக இருந்தது. இந்த முன்னறிவிப்பு 400 வருடங்கள் கழித்து நிறைவேறக் கூடியதாக இருந்தால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடன் அல்லாஹ் இருக்கிறான் என்று அக்கால மக்கள் எவ்வாறு திட உறுதி கொள்வர்?

ஆறாவது நோக்கம் இந்த முன்னறிவிப்பு செய்யப்பட்டதே இறைவனது இருப்பின் மீது நம்பிக்கை கொள்ளாதவர்கள் அல்லாஹ்வின் மார்க்கம் – அவனது தூய ரஸூல் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களை மறுத்துப் பொய்ப்படுத்தும் வகையில் பார்ப்பவர்களுக்கு ஒரு தெளிவான அடையாளம் கிடைப்பதாகும். இதன் பொருளும் இதுதான். எனது காலத்தில் இஸ்லாத்தைப் பொய்ப்படுத்துபவர்களுக்கு முன் இந்த முன்னறிவிப்பு செய்கிறேன். இஸ்லாத்தின் உண்மைக்கு தெளிவான அடையாளம் கிடைக்க வேண்டும். ஆனால் கிடைப்பதோ 400 வருடங்கள் கழித்து தான். தற்காலத்தில் வாழ்பவர்களுக்குக் கிடைக்காது. மாறாக அவர்களும் மரணித்த அவர்களின் சந்ததிகளில் எவரும் உயிருடன் இருக்க மாட்டர்கள். இதுவும் அறிவிப்பூர்வமான விஷயமல்ல.

ஏழாவது அன்னார் கூறினார்கள்: இந்த முன்னறிவிப்பு கொடுக்கப்பட்டதன் நோக்கம் குற்றவாளிகளின் வழி தெளிவாவதற்காக ஆகும். அவர்கள் பொய்யர்கள் என்று தெரிவிப்பதற்காக ஆகும். 400 வருடங்கள் கழித்து வருபவர்கள் மூலம் இக்காலத்தின் மக்களுக்கு எவ்வாறு குற்றவாளிகள் பொய் சொல்கிறார்கள் என்று தெரிய வரும்?

(அல் மவ்வூது, அன்வாருல் உலூம் தொகுதி 17 பக்கம் 542–544)

எனவே இந்த முன்னறிவிப்பு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய சந்ததிகளிலிருந்து வெளிப்பட வேண்டியதிருந்தது. அவர் உமது வித்திலிருந்து உமது சந்ததிகளிலிருந்து தோன்றுவார் என்று கூறுகிறது. பிற்கால சந்ததிகயிலிருந்து அல்ல. இது அன்னாரின் மகனைப் பற்றி கூறப்பட்டதாகும். அது மிகவும் மகிமையுடன் நிறைவேறியது. 52 வருடங்கள் வரை முஸ்லிஹ் மவ்வூது உடைய கிலாஃபத் ஒளி வீசும் அடையாளங்களுடன் வெளிப்பட்டது. அவர்களின் அறிவு ஞானப் பணிகள் பற்றி அந்நியரும் ஒப்புக் கொள்கின்றனர். அதன் விளக்கம் ஜமாஅத் படைப்புகளில் காணப்படுகிறது. அதனை விளக்கினால் நிறைய நேரம் தேவைப்படும்.

ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் அறிவித்தார்கள். அன்னார் முதலிலேயே அறிவிக்கவில்லை என்று ஆட்சேபனை செய்யப்பட்டது. அன்னார் 1944 –ல்தான் அறிவித்தார்கள். அன்னார் கூறுகிறார்கள்: நான் கூறுகிறேன். இறைவன் மீது ஆணையிட்டுக் கூறுகிறேன். முஸ்லிஹ் மவ்வூது பற்றிய முன்னறிவிப்பு உண்மைப்படுத்தக் கூடியவன் நான் தான். என்னை அல்லாஹ் அந்த முன்னறிவிப்பில் கூறியிருந்தான். வரக்கூடிய வாக்களிக்கப்பட்டவர் பற்றி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறியது என்னைக் குறித்தே ஆகும். நான் இட்டுக்கட்டிக் கூறுகிறேன் என்று கூறுபவர், என் மீது பொய்யைச் சுமத்துபவர் வந்து என்னுடன் முபாஹலா செய்யட்டும். இறைவனது பிடியின் தண்டனை குறித்து சத்தியமிட்டு அறிவிப்புச் செய்யட்டும். நான் பொய் கூறுகிறேன் என்று கூறட்டும். பிறகு இறைவன் எவர் உண்மையாளர்? எவர் பொய்யர்? என்று தானே தனது வானத்து அடையாங்களைக் கொண்டு அறிவிப்பான்.

ஜமாஅத்துகளும் சரி வெளியிலும் சரி எவரும் வரவில்லை. தனித்து ஜமாஅத்தைப் பிரிந்து சென்றவர்கள் யாரும் வரவில்லை. அவர்கள் கூறுகிறார்கள்: மிஸ்ரி சாஹிப் கூறியது போன்று கனவு உண்மையானது. சிலர் முர்தத் ஆகிவிட்டனர். பிறகு அன்னார் உண்மையைப் பற்றி கட்டுரை எழுதினார்கள். பிறகு நான் இந்தக் கட்டுரைக்குப் பதில் தருவேன். இதற்கு எதிரில் வருபவர்கள் நீண்ட காலம் நினைவில் கொள்ளத்தக்க தண்டனை பெறுவர் என்று நம்புகிறேன் என்று கூறினார்கள்.

சுருக்கமாக அல்லாஹ்வின் அருளால் அந்த முன்னறிவிப்பு நிறைவேறுவதற்கு ஒரு நீண்ட காலம் ஆகும் என்று எதிர்பார்த்தனர். அல்லாஹ் அவர்களைக் குறித்து எனக்கு தனது இல்ஹாம் மூலம் தெரிவித்தான். முன்னறிவிப்பு என் மூலம் நிறைவேறி விட்டது. இப்போது இஸ்லாத்தின் எதிரிகள் மீது சான்றுகளை முழுமையாகப் பூர்த்தி செய்து விட்டான். இஸ்லாம் இறைவனது உண்மை மார்க்கம் என்ற விஷயத்தை வெளிப்படுத்திக் காட்டி விட்டான். அதுபோன்று முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அவனது உண்மையான ரஸூல் ஆவார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அல்லாஹ்வினால் உண்மையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் ஆவார்கள்.

இஸ்லாத்தைப் பொய்ப்படுத்துபவர்கள்தான் பொய்யர்கள் ஆவர். முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களைப் பொய்யர் என்று கூறுபவர்கள் பொய்யர்கள் ஆவர். இறைவன் தனது மகத்தான முன்னறிவிப்பு மூலம் இஸ்லாம் மற்றும் ரஸூலே கரீம் (ஸல்) அவர்களுடைய உண்மைக்கு ஓர் உயிருள்ள அடையாளத்தை மக்கள் முன் எடுத்து வைத்து விட்டான்.

தமக்கு, ஒன்பது வருடங்களுக்குள்ளாக ஒரு மகன் பிறக்கப் போகிறான் என்று 1889 –ல் ஒரு செய்தியை 58 வருடங்களுக்கு முன்பு தருவதற்கு சக்தி படைத்தவன் யார்? அவர் விரைவாக வளருவார். உலகின் எல்லைகள் வரை பிரபல்யம் அடைவார். அவர் இஸ்லாம் மற்றும் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடைய பெயரை உலகில் பரப்புவார். அவர் மறைமுகமான வெளிப்படையான அறிவுகளால் நிரப்பப்படுவார். அவர் இறை கம்பீரம் வெளிப்படைக் காரணமாக இருப்பார். இறைவனது வல்லமை மற்றும் நெருக்கம், அருள் உடைய உயிருள்ள அடையாளமாக இருப்பார் என்ற செய்தியை உலகில் எந்த மனிதனும் தன் புறமிருந்து கூற முடியாது. இறைவன் இந்த செய்தியைத் தந்தான். இறைவனே அந்த செய்தியை நிறைவேற்றியும் தந்தான்.

அன்னார் தன்னைப் பற்றிக் கூறுகிறார்கள்: அந்த மனிதனைப் பற்றி மருத்துவர்கள் இவர் உயிருடன் இருப்பார் என்றோ நீண்ட வயதைப் பெறுவார் என்றோ நம்பவில்லை. அதாவது ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது உடைய ஆரம்ப கால உடல்நிலை அவ்வாறிருந்தது. மருத்துவர்கள் அன்னார் உயிருடன் இருப்பார் என்று கூட நம்பத் தயாராக இருந்ததில்லை.

பிறகு மேலும் கூறுகிறார்கள்: எனது உடல்நிலை சிறு வயதில் எவ்வளவு மோசமாக இருந்தது என்றால், ஒருமுறை மருத்துவர் மிர்ஸா யாகூப் பேக் சாஹிப் என்னைப் பற்றி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம், இவருக்கு உள்ளே புண் ஆகி வாயில்

இரத்தம் வரும் நோய் வந்து விட்டது. இவரை ஒரு மலைப்பாங்கான பகுதியில் தங்க வையுங்கள் என்று கூறினார்கள். உடனே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் என்னை சிம்லாவுக்கு அனுப்பினார்கள். அங்கு சென்று நான் சற்று தேறினேன். உடனே திரும்பி வந்தேன்.

எனவே, உடல்நிலை ஒருநாள் கூட நன்றாக இல்லாத ஒரு மனிதனை இறைவன் உயிருடன் வைத்தான். காரணம் அவர் மூலம் தனது முன்னறிவிப்புகளை நிறைவேற்றவும், இஸ்லாம் மற்றும் அஹ்மதிய்யத் பற்றிய உண்மைக்கான நிரூபணம் மக்களுக்கு கிடைப்பதற்காகவும் அவ்வாறு செய்தான். பிறகு அந்த மனிதர் வெளிப்படையான அறிவை எங்கிருந்தும் பெறவில்லை. இறைவன் தனது மலக்குகள் மூலம் அவருக்குக் கற்றுத் தந்தான். திருக்குர்ஆனின் பொருளைப் புரிய வைத்தான்.

அது எந்த மனிதனின் எண்ணத்திலும் வர இயலாத ஒன்றாக இருந்தது. அந்த அறிவை இறைவன் எனக்கு வழங்கினான். ஆன்மீக சுனை எனது உள்ளத்தில் பொங்கியது. இது வெறும் எண்ணமல்ல. மிக மிக உறுதியானதாகும். நான் முழு உலகிற்கும் அறைகூவல் விடுக்கிறேன். உலகில் எவராவது ஒருவர் இறைவன் தமக்கு குர்ஆன் கற்றுத் தந்ததாக வாதிப்பார் எனில் நான் அவருடன் போட்டியிடத் தயாராக உள்ளேன். (அக்காலத்தில் அன்னார் இந்த அறைகூவல் விடுத்தார்கள்).

அவர்கள் கூறுகிறார்கள்: நான் அறிகிறேன். உலகில் என்னைத் தவிர வேறு எவரும் திருக்குர்ஆன் இறைவனால் கற்றுத் தரப்பட்டதாக வாதிக்க இயலாது. இறைவன் எனக்கு திருக்குர்ஆனின் அறிவை வழங்கினான். இக்காலத்தில் திருக்குர்ஆன் கற்றுத் தருவதற்கு ஆசிரியராக என்னை நியமித்தான். நான் ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) மற்றும் திருக்குர்ஆனின் பெயரை உலகின் எல்லை வரை எட்ட வைப்பதற்காக நியமித்தான். மேலும் உலகிலுள்ள எல்லா பொய்யான மதங்களையும் வெற்றி கொள்ள நியமித்தான்.

அவர்கள் இறைவன் தந்த எல்லா சக்திகளையும் ஒன்று சேர்த்துக் கொள்ளட்டும். கிறித்தவ அரசரும் அவரது ஆட்சியும் ஒன்று சேர்ந்து கொள்ளட்டும். ஐரோப்பாவும் அமெரிக்காவும் ஒன்று சேர்ந்து கொள்ளட்டும். உலகில் பெரும் பெரும் செல்வந்தர்கள் சமுதாயங்கள் ஒன்று சேர்ந்து கொள்ளட்டும். அவர்கள் எனது இந்த வேலையில் தோல்வி அடையச் செய்வதற்காக சேர்ந்து முயற்சிக்கட்டும்.

பிறகும் கூட நான் இறைவன் மீது ஆணையிட்டக் கூறுகிறேன். அவர்கள் எனக்கு எதிரில் செயலிழப்பர். இறைவன் எனது துஆ மற்றும் முயற்சியின் முன் இவர்களின் எல்லாத் திட்டங்கள், சூழ்ச்சிகள், தந்திரங்களையும் மண்ணோடு மண்ணாக்குவான். இறைவன் என் மூலம் அல்லது எனது மாணவர்கள் மூலம் இந்த முன்னறிவிப்பின் உண்மையை நிரூபித்துக் காட்டுவதற்காக, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் பெயரின் அன்பளிப்பால், உண்மையான இஸ்லாத்தின் கண்ணியத்தை நிலைநாட்டுவான். அதுவரை உலகை விடவே மாட்டான். இஸ்லாம் தனது முழுமையான மகிமையுடன் உலகில் நிலைபெறும் வரை விடமாட்டான். ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்கள் உலகில் மீண்டும் உண்மையான நபி என்று காட்டாமல் விடமாட்டான். இது சாதாரண பணியல்ல. அன்னாரின் 52 வருட காலக்கட்டம் ஒவ்வொரு பொழுதிலும் இந்த அடையாளத்தை வெளிப்படுத்திக் காட்டுகிறது.

அன்னார் கூறுகிறார்கள்: எனது நண்பர்களே! நான் எனக்காக இறைவன் அறிவிக்காத எந்த கண்ணியத்தையும் விரும்பவில்லை. நான் நிறைய ஆயுளைக் கேட்பதாகவும் இல்லை. ஆம்; நான் இறைவனது அருளை எதிர்பார்க்கிறேன். நான் முழுமையாக திட உறுதி கொள்கிறேன். ஹஸ்ரத் ரஸூலே கரீம் (ஸல்) மற்றும் இஸ்லாத்தை நிலைநிறுத்துவதற்காகவும், இஸ்லாத்தை அதன் கால்களில் நிலைநிறுத்துவதற்காகவும், கிறித்தவத்தை ஒழிக்கவும் எனது வருங்கால வாழ்வின் எஞ்சிய பகுதியும் ஷய்த்தானின் தலையை நசுக்கக்கூடிய கிறித்தவத்தை ஒழிக்கின்ற கால்களின் ஒரு கால் என்னுடையதாக இருக்கும் – இன்ஷா அல்லாஹ். நான் இந்த உண்மையை முழு உலகின் முன் தெளிவாக எடுத்து வைக்கிறேன். இந்த குரல் வானங்கள் பூமியின் இறைவனின் விருப்பமாகும். இந்த உண்மை ஒருபோதும் அழியாது! அழியாது!! அழியாது!!!

இஸ்லாம் உலகில் வெற்றி பெற்றே தீரும் – இன்ஷா அல்லாஹ். கிறித்தவம் தோற்கடிக்கப்படும். உலகில் கிறித்தவத்தை நமது தாக்குதலிலிருந்து காப்பாற்ற எந்த உதவியாளனும் இல்லை. எமது கைகளால் அதற்கு தோல்வி ஏற்படும். அதற்கு தலையை உயர்த்த சக்தி இருக்காது. என்னால் நடப்பட்ட செடி மரமாகும். அதற்கு முன் கிறித்தவம் காய்ந்த கிளை போன்று மரணித்து விடும். உலகில் நாலாபுறமும் இஸ்லாம் மற்றும் அஹ்மதிய்யத்தின் கொடியே உயர்ந்து பறப்பதைக் காண முடியும்.

அவர்கள் கூறுகிறார்கள்: இப்போது நான் உங்களுக்கு ஒரு நற்செய்தி தருகிறேன். இறைவன் உங்கள் முன் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய முன்னறிவிப்பை நிறைவேற்றி விட்டான். அது முஸ்லிஹ் மவ்வூது பற்றியதாக இருந்தது. இந்த நிலையில் நான் உங்களிடம் உங்கள் பொறுப்புகள் பற்றியும் கவனமூட்டுகிறேன். அன்னார் கூறுகின்ற பொறுப்புகள் இன்றும் நமக்கும் இருக்கின்றன.

நான் இன்று அறிவிப்பதை உண்மைப்படுத்துபவர்களாகிய நான் முஸ்லிஹ் மவ்வூது என்று நீங்கள் உண்மைப்படுத்துகிறீர்கள். உங்கள் மீத அது கடமையாக உள்ளது. உங்களது முதல் கடமையாவது, உங்களிடம் மாற்றத்தை ஏற்படுத்துங்கள். உங்கள் இரத்தத்தின் இறுதி சொட்டு வரை இஸ்லாம் மற்றும் அஹ்மதிய்யத்தின் வெற்றிக்காக எந்த சாக்குப்போக்கும் இன்றி தயாராகுங்கள். இந்த முன்னவிப்பைக் கேட்டு நீங்கள் இறைவன் இந்த முன்னறிவிப்பை நிறைவேற்றியதற்காக மகிழ்ச்சி அடையலாம். ஆனால் நான் உங்களிடம் கூறுகிறேன்.

நீங்கள் நிச்சயமாக மகிழ்ச்சி அடைய வேண்டும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தாமே எழுதியிருக்கிறார்கள். நீங்கள் மகிழ்ச்சி அடையுங்கள். மகிழ்ச்சியின் எல்லை வரை செல்லுங்கள். இந்த முன்னறிவிப்பைக் கேட்டு, ஏனென்றால் அதற்குப் பிறகு வெளிச்சம் வரும். எனவே உங்களை மகிழ்ச்சி அடைவதிலிருந்து நான் தடுக்கவில்லை. நீங்கள் மகிழ்ச்சி கொள்ளுங்கள். ஆனால் இந்த மகிழ்ச்சியில் உங்கள் பொறுப்புகளை மறந்து விடாதீர்கள்.

இறைவன் எனக்கு கனவில் காட்டினான். நான் வேகமாக ஓடுகிறேன். பூமி எனது கால்களுக்குக் கீழே வேகமாக பின்னால் செல்கிறது. இவ்வாறு இறைவன் என்னிடம் இல்ஹாம் மூலம் நான் விரைவாக வளர்வேன் என்று செய்தி அறிவித்தான். எனவே எனக்கு இதுவே விதியாகும். நான் முன்னேற்றத்தின் பக்கம் வேகமாகச் செல்வேன். அத்துடன் உங்கள் மீதும் ஒரு கடமை உள்ளது. நீங்கள் உங்கள் பாதத்தையும் வேகமாக்குங்கள்.

உங்கள் சுறுசுறுப்பின்மையை விட்டு விடுங்கள். எனது பாதத்துடன் தனது பாதத்தையும் வைப்பவருக்கு வாழ்த்துக்கள். விரைவாக முன்னேற்றப் பாதையில் அவர் ஓடி வருகிறார். இறைவன் அந்த மனிதர் மீது கருணை காட்டுவானாக. சோம்பல் கவனமின்மையைப் பயன்படுத்தி தனது பாதத்தை வேகமாக வைக்காதவருடன் இறைவன்தான் கருணை காட்ட வேண்டும். மைதானத்தில் முன்னேறுவதற்குப் பதில் நயவஞ்சகர்கள் போன்று தமது பாதத்தைப் பின்னோக்கி வைக்கின்றனர். நீங்கள் முன்னேற விரும்பினால் உங்கள் பொறுப்பைச் சரியாகப் புரிந்தால் அடிக்கு அடி என்னுடன் வருவீர்கள். அதன் மூலம் முஹம்மது (ஸல்) அவர்களுடைய கொடியை குஃப்ரின் (மறுப்பின்) இதயத்தில் ஊன்ற வேண்டும். பொய்யை உலகை விட்டு முற்றிலும் துடைத்து விட

வேண்டும் – இன்ஷா அல்லாஹ். அவ்வாறே நடக்கும். பூமியும் வானமும் அகன்று விடலாம். ஆனால் இறைவனது வார்த்தை ஒருபோதும் அகன்று விடாது.

(அல் மவ்வூது, அன்வாருல் உலூம் தொகுதி 17 பக்கம் 645–649)

அல்லாஹ் நமக்கு வாய்ப்பு வழங்குவானாக. நாம் பணி செய்பவர்களாக இருப்போமாக. முஸ்லிஹ் மவ்வூது தினக் கூட்டம் மட்டுமே நடத்துபவராக இல்லாமல் இருப்போமாக. இஸ்லாத்தின் செய்தியை உலகில் எடுத்து வைப்போமாக. நாம் கூட்டம் நடத்துகிறோம் என்பதில் மட்டும் மகிழ்ச்சி அடையக் கூடாது. உண்மையான முறையில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் எந்தப் பணிக்கு அனுப்பப்பட்டார்களோ அந்தப் பிரச்சாரத்தை முன்னெடுத்துச் செல்பவர்களாக வேண்டும். அதற்காக நிறைய முன்னறிவிப்பு செய்துள்ளார்கள். அதில் ஒன்று முஸ்லிஹ் மவ்வூது பற்றிய முன்னறிவிப்பாகும்.

அன்னாரது பணிகளில் ஒரு பணியை மட்டும் கூறுகின்றேன். வெளிப்படையான மறைமுகமான அறிவுகளால் நிரப்பப்படுவார் என்பதும் ஒரு முன்னறிவிப்பாகும். அதன் ஒரு பொலிவை உங்களுக்கு எடுத்துக் கூற விரும்புகிறேன். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களுடைய நூல்கள் சொற்பொழிவுகளின் தொகுப்பு அன்வாருல் உலூம் என்ற பெயரில் வெளியிடப்படுகிறது. நிறைய தொகுப்புகள் வெளிவந்து விட்டன. உருது தெரிந்தவர்கள் படிக்க வேண்டும். அவற்றில் சில நூல்களுக்கு ஆங்கில மொழிபெயர்ப்பும் வருகிறது.

இதுவரை அன்வாருல் உலூம் 26 தொகுதிகள் வெளிவந்து விட்டன. இவற்றில் 670 நூல்கள், சொற்பொழிவுகள் வந்து விட்டன. குத்பாத்தே மஹ்மூது இதுவரை 39 தொகுதிகள் வெளிவந்து விட்டன. இதில் 1959 வரையுள்ள குத்பாக்கள் வெளிவந்து விட்டன. இதில் 2367 குத்பாக்கள் இருக்கின்றன. தஃப்ஸீரே ஸகீர் 1071 பக்கங்கள் கொண்டவை. தஃப்ஸீரே கபீர் 10 தொகுதிகளைக் கொண்டது. இதில் திருக்குர்ஆனின் 59 சூராக்களுக்கு தஃப்ஸீர் செய்யப்பட்டுள்ளது. தஃப்ஸீரே கபீர் 10 தொகுதிகளைச் சேர்த்து 5907 பக்கங்கள் உள்ளன. வெளியிடப்படாத தஃப்ஸீர் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களுடைய தர்ஸுல் குர்ஆன் ஆகும்.

அதை Resarch Cell கம்போஸ் செய்த பிறகு ஃபஸ்லே உமர் ஃபவுண்டேஷனிடம் ஒப்படைத்து விட்டது. அது 3094 பக்கங்கள் உள்ளன. அதற்குப் பிறகு இப்போது Resarch Cell இடம் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களுடைய எழுத்துக்கள் மற்றும் பேச்சுக்களில் இருந்து குர்ஆன் விளக்கங்களை ஒன்று சேர்க்குமாறு கூறியுள்ளேன். அப்பணி தொடங்கி உள்ளது. அது 9000 பக்கங்கள் ஆகிவிட்டது. இன்னும் பணி தொடர்ந்து நடக்கிறது.

இது அன்னாரின் பணிகள் குறித்த சுருக்கமான ஆய்வாகும். ஆனால் ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்கள் தமது காலத்தில் ஒரு குத்பாவில் கூறினார்கள். ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்களுடைய மேற்கோளைப் படிக்கிறேன். அன்னார் கூறுகிறார்கள்: முஸ்லிஹ் மவ்வூது பற்றி இறைவன் அவர் மறைமுகமான வெளிப்படையான அறிவுகளால் நிரப்பப்படுவார் என்று கூறினான். நான் நிறைய விபரங்களைத் தொகுத்தேன். ஆனால் இப்போது அதன் ஒரு குறிப்பு மட்டுமே கூற முடியும். அதனை இப்போது நான் தயார் செய்து வந்துள்ளேன். அது இவ்வாறாகும்.

விரிவுரை பற்றி கூறுவதாயின், தஃப்ஸீரே கபீர் ஒரு வியத்தகு தஃப்ஸீர் ஆகும். எவர் அதனை ஆய்வு செய்தாலும் அதன் எந்தப் பகுதியைப் படித்தாலும் உலகின் மிகப்பெரிய சான்றான்மை மிக்க வல்லுனர் ஒருவர்தான் இவர் என்று ஒப்புக் கொள்ள வேண்டிய நிர்பந்தத்திற்கு ஆளாவார். எனது கருத்தின்படி ஹுஸூர் (ரலி) அவர்கள் திருக்குர்ஆன் தஃப்ஸீரில் 8000, 10000 பக்கங்கள் எழுதியுள்ளார்கள். தஃப்ஸீரே கபீரின் 11 தொகுப்புகள் உள்ளன. புத்தகத்தின் மேல் ஹுஸூர் (ரலி) அவர்கள் பத்து நூல்கள் மற்றும் பத்திரிகை எழுதியுள்ளார்கள். இஸ்லாமிய நல்லொழுக்கம், இஸ்லாமியக் கொள்கைகள் பற்றி 31 நூல்கள் மற்றும் பத்திரிகை எழுதியுள்ளார்கள். வாழ்க்கை வரலாறு 13 நூல்கள் மற்றும் பத்திரிகையாக எழுதியுள்ளார்கள்.

வரலாறு சம்பந்தமாக நான்கு நூல்களும் ஃபிக்ஹா பற்றி மூன்று நூல்களும் பத்திரிகைகளும் எழுதியுள்ளார்கள். இந்தியா பிரிவினைக்கு முந்தைய அரசியல் பற்றி 25 நூல்கள் மற்றும் பத்திரிகைகளும், நாடு பிரிவினைக்குப் பிறகு அரசியல் பற்றிய இந்தியா பாகிஸ்தான் நிறுவுதல் பற்றி 9 நூல்கள் மற்றும் பத்திரிகைகளும் எழுதியுள்ளார்கள்.

காஷ்மீர் அரசியல் குறித்து 15 நூல்கள் மற்றும் பத்திரிகைகளும் எழுதியுள்ளார்கள். அஹ்மதிய்யாவின் திட்டங்கள் பற்றிய சிறப்பான விவகாரங்கள் மற்றும் திட்டங்களின் 99 நூல்களும் பத்திரிகைகளும் எழுதியுள்ளார்கள். இந்த எல்லா நூல்கள் மற்றும் பத்திரிகைகளின் தொகுப்பு 225 ஆகிறது. இப்போது ஒருவேளை நிறைய விபரங்கள் கூட தரப்படவில்லை. இப்போது உங்களுக்கு மேற்கொண்டு நிறைய விபரங்கள் உள்ளன.

முதலில் நான் கூறியதுபோன்று அன்னார் கூறுகிறார்கள்: இல்ஹாமில் மறைவான வெளிப்படையான அறிவால் நிரப்பப்படுவார் என்று கூறப்பட்டதற்கிணங்க ஒரு பார்வை செலுத்தினால் வெளிப்படையான அறிவுகளும் தென்படுகின்றன. மறைமுக அறிவுகளும் தென்படுகின்றன. பிறகு இன்னொரு ஞானம் என்னவெனில், ஏதாவது ஒரு நூலை அல்லது பத்திரிகைக்கு எழுதும்போதும் ஒவ்வொருவரும் இதனை விட அதிகமாக யாரும் எழுத முடியாது என்று கூறுவர். அரசியலை அவர்கள் தலைமை வகித்தபோது அரசியலுக்கு அன்னார் தலைமையில் ஆலோசனை வழங்கியபோது பெரும் எதிர்ப்பாளர்கள் கூட அன்னாரின் ஒப்புவமையற்ற தகுதியை ஒப்புக் கொள்ளும் நிர்பந்தத்திற்கு ஆளானார்கள்.

சுருக்கமாக, ஹுஸூர் (ரலி) அவர்களுடைய வெளிப்படையான அறிவும் உட்புற அறிவும் நிரப்பப்படுவார் என்பது ஒரு பெரிய விபரமாகும் என்று கூறியவாறு ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள்: அவர்களில் ஆயிரத்தில் ஒரு பகுதி கூட என்னால் செய்ய முடியாது. மேலோட்டமாக உங்களுக்கு இதனை வைத்து விட்டு முடித்துக் கொள்கிறேன்.

(மாஹானா அன்ஸாருல்லாஹ், ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது நம்பர், மே,ஜூன்,ஜூலை 2009 பக்கம் 64–69)

அல்லாஹ்வின் ஆயிரக்கணக்கான ரஹ்மத்துகள் அவர்கள் மீது உண்டாகட்டும். ஒவ்வொரு பொழுதிலும் அன்னாரின் தகுதியை உயர்த்திக் கொண்டே செல்வானாக. மேலும் நாம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய இந்த மகன் போன்று இஸ்லாத்தைப் பரப்புவதில் ஒரு வலிமை உள்ளத்தில் உருவாக்குவோமாக. இஸ்லாத்தின் சேவைக்காக எப்போதும் தயாராக இருப்போமாக. மார்க்கத்திற்கு தொண்டாற்றாதவர்களுடன் இல்லாமல் இருப்போமாக.

முஸ்லிஹ் மவ்வூது யாரைக் குறித்து உங்கள் காலத்தில் இந்த இயக்கம் கெட்ட பெயருக்கு ஆளாகி விட வேண்டாம் (கலாமே மஹ்மூது பக்கம் 97) என்று கூறினார்களோ அவர்களைப் போன்று ஆகாமல் இருப்போமாக. நாம் இந்த இயக்கத்திற்கு கெட்ட பெயர் ஏற்படுத்துபவராக அன்றி இயக்கத்திற்கு மேலும் மேலும் தொண்டு செய்பவராவோமாக.

தொழுகைக்குப் பிறகு இரு காயிப் ஜனாஸா தொழ வைப்பேன். ஒன்று, கண்ணியத்திற்குரிய மர்யம் அஸ்ஸமத் சாஹிபா. இவர் கண்ணியத்திற்குரிய முல்க் உமர் அலி கோகர் சாஹிப் முல்தானின்

EDITOR
Moulvai.O.M. MUZZAMMIL AHMAD
Mobile : + 91 98885-67232
SUB EDITOR
Muallim. A. KHALEEL AHMAD
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly BADAR Qadian
பதர் வாரப் பத்திரிகை காதியான்
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2020-2022 Vol. 5 Thursday 26 March 2020 Issue No. 13

MANAGER
NAWAB AHMAD
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.500/- (Per Issue Rs. 9/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

தலைவர் மற்றும் முல்தானின் முன்னாள் அமீர் சாஹிபுடைய இரண்டாவது துணைவியார் ஆவார். இவர் தமது 86 வயதில் விபத்தினால் வஃபாத் ஆகிவிட்டார். இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிவூன். இதில் அவரது மகளும் லிஃப்டில் இருந்தார். அங்கு விபத்து நடந்தது. லிஃப்ட் செயலிழந்ததால் அதில் காயமுற்றார். மருத்துவமனையில் இருக்கிறார். இவரைக் காப்பாற்ற முடியவில்லை. இவர் ஒரு ஜெர்மன் பெண்மணியாவார். ஹெம்பர்க்கில் இருந்தார்.

1934 –ல் பிறந்தார். 1952 –ல் பைஅத் செய்தார். முல்க் உமர் அலி கோகர் சாஹிபுடன் இவருக்கு திருமணம் நடந்தது. பிறகு பாகிஸ்தான் வந்து விட்டார். பிறகு அவர் மரணித்த பிறகு ஜெர்மனி வந்து விட்டார். பிறகு மீண்டும் பாகிஸ்தான் சென்று விட்டார். வஸிய்யத்தின் அருளுக்குரிய திட்டத்தில் இணைந்திருந்தார். தொழுகை நோன்புகளைப் பேணுபவர். குறித்த நேரத்தில் தொழுவதில் பேணுதல் இருந்தது. கணக்குகளை சரியாக வைத்திருந்தார். சூரியன் மறையும்போதும் உதிக்கும்போதும் திருக்குர்ஆன் முறையாக ஓதி வந்தார். முறையாக நோன்பு நோற்று வந்தார்.

அவரது சந்ததிகள் கூறுகிறார்கள்: எமது தந்தையுடன் இவர்களுக்கு 1952 –ல் திருமணம் நடந்தது. அப்போது ஜெர்மனியில் ஜமாஅத்தின் முரப்பியாக இருந்த கண்ணியத்திற்குரிய அப்துல் லத்தீஃப் சாஹிப் பைஅத்தும் வாங்கி நிகாஹ்வும் நடத்தித் தந்தார். திருமணத்திற்குப் பிறகு பாகிஸ்தான் வந்து விட்டார்.

பிள்ளைகள் கூறுகின்றனர்: எங்களது முதல் தாயாராகிய முல்க் உமர் அலி சாஹிபுடைய மூத்த மனைவி ஸய்யிதா பேகம் சாஹிபாவும் இவர்களைக் கண்ணியமாக நடத்தினார்கள். பாகிஸ்தான் வந்து தொழுகை, திருக்குர்ஆன் ஓதுதல் இவற்றை ஆரம்பித்தார். அவர்களுக்கு ஓதித் தர ஒருவரை ஏற்பாடு செய்யப்பட்டது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய இஸ்லாமிய போதனைகளின் தத்துவ ஞானம் என்ற நூலை அன்னார் முதலில் படித்தார். இவர் பாகிஸ்தான் வந்ததால் ஆங்கிலமும் உருதுவும் பேசப் பழகிக் கொண்டார். நன்றாகப் புரிந்து கொள்ளவும் முடிந்தது.

இவருக்கு ஒரு மகன் இருந்தார். அவர்களுக்கு திருமண வேளை வந்தபோது முல்க் சாஹிப் உடைய முதல் மனைவியாகிய ஸய்யிதா பேகம் சாஹிபாவிடம் முடிவெடுக்கும் உரிமையை வழங்கி விட்டார். நீங்கள் சிறந்ததாகக் கருதுபவரை திருமணம் செய்து வையுங்கள் என்று கூறி விட்டார். அவர்களின் வயிற்றில் பிறந்தவர்கள் தாரிக் அலி மற்றும தாஹிரா ஆவார்கள். அல்லாஹ் மர்ஹூமாவிடம் மன்னிப்பு மற்றும் கருணையின் நடைமுறை காட்டுவானாக. அவர்களின் தகுதியை உயர்த்துவானாக.

இரண்டாவது ஜனாஸா நேசத்திற்குரிய ஜாஹித் பர்த்ஸ் அஹ்மது. 12 வயதில் வஃபாத் ஆகிவிட்டார். இன்னா லில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிவூன்.

தாரிக் நூரி மற்றும் அத்தீயத்துல் அஸீஸ் கதீஜா உடைய மகன் ஆவார். நேசத்திற்குரிய ஜாஹித் உடைய தாய்வழிப் பாட்டனார் ஃபாரூக் அஹ்மது கான். இவர் ஹஸ்ரத் நவாப் அமத்துல் ஹஃபீழ் பேகம் சாஹிபாவுடைய மகன் வழிப் பேரன் ஆவார். இவர் மூத்த பேரன். அவரும் எழுதியுள்ளார். மேலும் பலரும் எனக்கு எழுதியிருக்கிறார்கள். அவருடன் சேர்த்து 4 பையன்கள். இவர்களின் இந்தப் பையன் பல சிறப்புகளைக் கொண்டவனாக இருந்தான். அதில் சீர்திருத்தம் நற்செயல் மற்றும் கிலாஃபத்துடன் தொடர்ந்து கடிதம் எழுதி வந்தான். எப்போதும் தேர்வு மற்றும் மற்ற விஷயங்களுக்காக எனக்கு தொடர்ந்து கடிதம் எழுதி வந்தான். அஹ்மதியாக இருப்பதில் ஒரு பெருமிதம் இருந்தது. பாகிஸ்தானில் அஹ்மதியாக இருப்பினும் பள்ளிக்கூடத்தில் கூறுவதும் பெரிய விஷயமாகும். மேலும் குத்பாக்களை தொடர்ந்து கேட்பான். வக்ஃபே நவ் ஆக இருந்தான். வகுப்புகளுக்கு வருவான். அவனது வயதுக்கேற்ற வக்ஃபே நவ் பாடத்திட்டப் பகுதி நினைவில் இருந்தது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய கஸீதா நினைவில் இருந்தது. ஜமாஅத் சந்தாக்களில் தஹ்ரீகே ஜதீது மற்றும் வக்ஃபே ஜதீதில் பங்கெடுப்பான். தொடர்ந்து பங்கெடுப்பான். சுயமே செய்வான். தொழுகை சென்டருக்குச் சென்று ஜமாஅத்துடன் தொழுவதில் கவனம் இருந்தது. ஃபஜ்ருக்குப் பிறகு தொடர்ந்து திருக்குர்ஆன் ஓதினான். உடன் உள்ள சிறுவர்களுக்கு நல்ல குரல்வளம் இருந்ததாக எழுதியுள்ளனர். ஏழாவது வகுப்பு படித்து வந்தான். வீட்டில் ஜெனரேட்டர் தீப்பிடித்து அவனுக்கு காயம் ஏற்பட்டது. குணமாகி வந்தது. இவன் குணமாகி வருவதாக மருத்துவர்களும் கூறினர். புண் ஆறுவதாக கூறினர். ஆனால் பிறகு இன்பெக்ஷன் அதிகம் ஆகிவிட்டது. எதனால் இன்பெக்ஷன் ஆனது? என்பது தெரியவில்லை. இதனால் மற்ற பகுதிகளிலும் அதன் தாக்கம் ஏற்பட்டது. இந்த இன்பெக்ஷனால் மருத்துவமனையிலேயே வஃபாத் ஆகி விட்டான்.

அல்லாஹ் இந்த மர்ஹூமான குழந்தை நிச்சயமாக இந்த வயதில் குற்றமற்ற சிறுவனான இவன் சொர்க்கவாதி ஆவான். எனினும் தனது அன்புக்குரியவர்களின் அருகில் இடம் தருவானாக. அவனது தாய் தான் வளர்த்தார். தந்தையார் வாழ்நாள் முழுக்க ஏன் என்று கேட்கவில்லை. அந்தத் தாய் தனித்து விட்டார். தாய் மற்றும் தாய்வழிப் பாட்டனார் மற்றும் பாட்டி இவனை வளர்த்தார்கள். அவர்களுக்கு அல்லாஹ் பொறுமையையும் தைரியத்தையும் தருவானாக. அவர்களுக்கு இது ஒரு பெரும் துக்கம் ஆகும். சகித்துத் கொள்ள வாய்ப்பு வழங்குவானாக. பையனது தாய்வழிப் பாட்டியாகிய தாஹிரா பேகம் சாஹிபாவாகிய மர்யம் பேகம் சாஹிபாவின் மகளுக்கும் நான் கூறியதுபோன்று விபத்தில் காயம் ஏற்பட்டு மருத்துவமனையில் இருக்கிறார். அவருக்கு அல்லாஹ் ஆரோக்கியமான வாழ்வை வழங்குவானாக. அவருக்கு மற்ற பிள்ளைகள் மகிழ்ச்சியையே வழங்குவார்களாக.

ஒரு பையன் எழுதுகிறான்: ஜாஹிதிடம் ஒரு நல்ல பழக்கம் உண்டு. நோயுற்ற நிலையிலும் மருத்துவமனையில் எப்போதும் நான் தொழுது விட்டேனா என்று கேட்டு வந்தான். சில நேரங்களில் மயக்க நிலையில் இருந்தான். விழித்த பிறகு தொழவில்லை என்று சொன்னால் உடனே படுத்த நிலையிலேயே தொழத் தொடங்கி விடுவான் என்று அவனது கஸின் தாரிக் அலி கோகர் உடைய மகன் கூறுகிறார்.

நான் கூறியதுபோன்று அல்லாஹ் அவரது தகுதியை உயர்த்துவானாக. அவரது தாய் மற்றும் தாய்வழிப் பாட்டனார் பாட்டி ஆகியோருக்கு பொறுமையையும் தைரியத்தையும் வழங்குவானாக.

Love for All Hatred for None
எல்லோரிடத்தும் அன்பு; எவரிடத்தும் இல்லை வெறுப்பு

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad